பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5.00

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 03 வியாழக்கிழமை (19-10-2000) தொ. பேசி:- 3378 ஒலி: 304

### வவுனியா கணேசபுரம்

## மினி முகாம் மீது புலிகள் தாக்குதல் 5 இராணுவம் பலி 11 பேர் காயம்!

வவுனியா கணேசபுரத்தில் அமைந்துள்ள இராணுவத்தினரின் மினி முகாம் மீது விடுதலைப்புலிகள் நேற்று மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் ஐந்து படையினர் கொல்லப்பட்டுள்ளதாகவும் 11 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நேற்று காலை 6.30 மணியளவில் இடம் பெற்ற இந்த அதிரடித் தாக்குதலை அடுத்து இராணுவத்தினருக்கு உதவிக்காக மேலதிகமான படையினர் அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. விடுதலைப் புலிகளினால் மேற் கொள்ளப்பட்ட இத்தாக்குதலை இராணுவம் முறியடித்து விட்டதாகவும் இத்தாக்குதலின் போது 5 படையினர் கொல்லப்பட்டும் (8ம் பக்கம் பார்க்க)

## ★ 11-வது பாராளுமன்றத்தின் சபாநாயகராக 'அநுரா'வும்; பிரதிசபாநாயகராக 'சரத்'தும்

### ஏகமனதாகத் தெரிவாகினர்

(நமது நிருபர்)

**புத்தாயிரமாம் ஆண்டில் 11 வது பாராளுமன்றத்தின் புதிய சபாநாயகராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அநுரா பண்டாரநாயக்க நேற்று பிற்பகல் பாராளுமன்றம் கூடிய போது ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.**

**இலங்கைப் பாராளுமன்ற வரலாற்றில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பது இரண்டாவது தடவை என்பது குறிப்பிடத்தக்கதாகும.**

11-வது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் நேற்றுப் பிற்பகல் 2-30 மணியளவில் ஆரம்பமானது.

முதலில் பாராளுமன்ற சபாநாயகர் தெரிவு இடம் பெற்றது. பாராளுமன்றத்தின் புதிய சபாநாயகராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அநுரா பண்டாரநாயக்காவின் பெயரைப் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் புதிய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவும் ஐக்கியதேசியக்கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்காவும் முன்மொழிய ஜோன் அமரதுங்கா வழிமொழிய சபையினரின் கர (8ம் பக்கம் பார்க்க)

## உயர் கல்வி அமைச்சர் வெஸ்லிகுணவர்த்தனா?

## செம்மணியில் நிலக்கண்ணி வெடி 2படையினர் பலி; 7 பேர் காயம்

(கொழும்பு)

யாழ். செம்மணிப் பகுதியில் நேற்றைய தினம் உழவியந்திரத்தில் பயணம்செய்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடத்தியநிலக்கண்ணி வெடித்தாக்குதலில் படைத்தரப்பில் இருவர் உயிரிழந்ததாகவும், 7 பேர் காயமடைந்துள்ளதாகவும் விஷேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இதே வேளை கொழும்புத்துறை, அரியாலை மற்றும் சாவகச் சேரிப்பகுதியில் புலிகளின் நிலைகள் மீது படையினர் நடத்திய தாக்குதலில் 9 புலிகள் உயிரிழந்துள்ளதாகவும் விஷேட ஊடகத் தகவல் நிலையம் மேலும் அறிவித்துள்ளது. (ந-4)

## பிரதி நிதி அமைச்சர் றொனி டி மெல்?

முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெலுக்கு பிரதி நிதி அமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

பொது ஜன ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியல் மூலம்எம்.பியாகியறொனி டி மெல் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் பதினொருவருடங்கள் நிதி அமைச்சராக இருந்தவர்.

கடந்த அமைச்சரவையில் பிரதி நிதிஅமைச்சர் பதவியை ஜீ.எல்.பீரிஸ்வகித்தார் எனபதும் குறிப்பிடத்தக்கது.

இதே வேளை நிதி அமைச்சர் பதவியைத் தொடர்ந்தும் (8ஆம் பக்கம் பார்க்க)

## சிற்றிஒவ்றிங்கோ கப்பல் சேவை இன்று இல்லை

(திருமலை)

திருமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான ''சிற்றி ஒவ் றிங்கோ,, பயணிகள் கப்பல் சேவை கடும்காற்றினால் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பு காரணமாக திட்டமிட்டபடி நேற்று நடைபெறவில்லையென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்' தலைமைக் காரியாலயத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் யாழ்ப்பாணத்திலிருந்து திருமலைக்கான கப்பல் சேவை வழமைபோல் இன்று நடைபெறமாட்டாது எனத்தெரிவிக்கப்படுகிறது. (ந-4

## உடம்பில் ஓடுவது சிங்கள இரத்தமாயின் சிறுபான்மையிடம் மண்டியிடக்கூடாது

### சிஹல உறுமய செயலாளர் ஆவேசம்

(கொழும்பு)

பொது ஜனஐக்கிய முன்னணியினரதும் ஐக்கிய தேசிய கட்சியினரதும் உடம்பில் உண்மையான சிங்கள இரத்தம் ... தற்கு தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் பின்னால் ஓடித்திரிய மாட்டார்கள்.

இவ்வாறு நேற்று சிஹல உறுமயக் கட்சியின் செயலா

(கொழும்பு)

புதிய அமைச்சரவையில் உயர்கல்வி அமைச்சராக பேராதனைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி வெஸ்லி குணவர்த்தன நியமிக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கல்வி உயர் கல்வி அமைச்சு இம்முறை கல்வி அமைச்சு உயர்கல்வி அமைச்சு என இரு தனி அமைச்சுகளாக இயங்கவுள்

கடந்தமுறை கல்வி உயர் கல்வி அமைச்சராக இருந்த றிச்சாட் பத்திரனா பாராளுமன்றத்தின் சபைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

## பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பதவி அனுருத்தவிடமிருந்து பறிப்பு?

(கொழும்பு)

யுத்தத்தை தீவிரமாக முன்னெடுத்து ஆனையிறவை மீண்டும் கைப்பற்றுவோம் என ஆவேசப்பேச்சு பேசிய பிரதமர் ரட்ண சிறி விக்ரம நாயக்காவை பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக நியமிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிக்கா

(8ஆம் பக்கம் பார்க்க)

## அவசர கால நீடிப்பு 94 அதிகப்படி வாக்குகளால் நிறைவேறியது

(கொழும்பு)

நேற்றையதினம் கூடியபதினோராவது புதிய பாராளுமன்றத்தில் முதலாவது சட்டமூலமான அவசர கால சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கும் பிரேரணை 94 அதிகப்படியா வாக்குகளால் நிறைவேறியது.

ஈ.பி,டி.பி, தேசிய ஐக்கிய முன்னணி, சிஹல உறுமய ஆகியகட்சிகள்பிரேரணைக்கு ஆதரவாகவும், தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ ஜனதா விமுக்தி பெரமுன, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகியவை எதிர்த்தும்

(8ஆம் பக்கம் பார்க்க)

(8ம் பக்கம் பார்க்க)

ஒடுமானால் ஆட்சி அமைப்ப

(8ம் பக்கம் பார்க்க)

### வாக்களிப்பு அன்று காத்தான் குடியில்

## ஐ.தே.கட்சியின் முகவர் ஒருவர் கழுத்து வரை புதைக்கப்பட்டார்!

நடந்து முடிந்த தேர்தல் வாக்களிப்பு தினத்தன்று காத்தான் குடி இரும்புத்தைக்கா வாக்களிப்பு நிலையத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் வாக்களிப்பு முகவராகக் கடமையாற்றிய முகமது பாயிர் என்பவர் எதிரணி வேட்பாளர் ஒருவரின் ஆதரவாளர்களால் கடத்திச் செல்லப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட சம்பவமொன்று தற்போது அம்பலத்துக்கு வந்துள்ளன.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது,

ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்களிப்பு முகவராகக் கடமையாற்றிய முகம்மது பாயிர் என்பவரை எதிரணி ஆதரவாளர்கள் கடத்திச் சென்று சித்திரவதைக்குள்ளாக்கிய பின் ‘பூனைக்கு முனை’ என்ற இடத்தில் ஆழமான புதைகுழி தோண்டி அவரது கழுத்தின் மேற்பகுதி மாத்திரம் தெரியத் தக்கதாக புதைத்தனர்.

இது தொடர்பாக பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ-108

## தலைவராக ரவூப் ஹக்கீம்

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவராக ரவூப் ஹக்கீம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் அதிஉயர்பீடம் இந்த முடிவை எடுத்துள்ளதுடன் உத்தியோகபூர்வ பேச்சாளராகவும் ரவூப் ஹக்கீம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(வ-5)

## கலாநிதி ராதிகாவுக்கு மனித உரிமைகள் விருது

கலாநிதி ராதிகா குமாரசாமிக்கு மனித உரிமைகள் விருது வழங்கப்பட்டுள்ளது.

கலாநிதி ராதிகா குமாரசாமிக்கு மனிதஉரிமைகளுக்கான ‘‘குருதோஹைட்நி’’ என்ற விருதினை கடந்த திங்கட்கிழமை வியன்னாவில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

இவ்விருதினை வியன்னாவில் உள்ள ஒெலஸ்லியா நிலையத்தில் பெருந்திரளான அரசியல்வாதிகள், மனித உரிமைப் போராளிகள், ஊடகவியலாளர்கள், (8-ம் பக்கம்பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

தச்சன் தோப்பு, கைதடி எனும் முகவரியைச் சேர்ந்த பிருந்தாமலர் – சங்கரலிங்கம் என்பவருடைய தேசியஅடையாள அ. இல. 805091622 V விசேட அடையாள அட்டையின்போட்டோபிரதி A.T.I யின் அடையாள அட்டை DCS இன் கொம்பியூட்டர்பதிவேடுஎன்பன பேஸ் உடன் திருநெல்வேலி, சிவன்கோயில்– அம்மன் கோயில் வீதியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 'வலம்புரிக்' காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். [1839

யுத்த அனர்த்தங்களினால்,

# கிளி. மாவட்டத்தைச் சேர்ந்த 903 பேர் அங்கவீனர்களாகினர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்கள் காரணமாக 903 பேர்அங்கவீனர்களாகியிருப்பதாக கிளிநொச்சி மாவட்ட உடல் ஊனமுற்றோர் சங்கம் அறிவித்துள்ளது.

இவர்களில், 550 ஆண்களும் 353 பெண்களும் அடங்குவார். அவயவங்களை இழந்து பாதிக்கப்பட்ட இவர்களுக்கு வேண்டிய உதவிகள் எதனையும் அங்குள்ள அரச சார்பற்ற நிறுவனங்களோ அன்றி, அரச அமைப்புக்களோ வழங்க முன்வராததினால் வாழ்க்கையை நடத்துவதற்கு பெரிதும் சிரமப்படுவதாகவும் ஊனமுற்றோர் சங்கம் தெரிவித்துள்ளது. (உ)

## உரும்பிராயில் கோஷ்டி மோதல்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரு இளைஞர் குழுக்களிடையே ஏற்பட்ட கோஷ்டிமோதல் இராணுவத்தரப்பு விசாரணைவரை சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

மல்லாகம் இளைஞர்களுக்கும் உரும்பிராய் இளைஞர்களுக்கும் இடையே ஏற்பட்ட வாய்த் தகராறு உச்சநிலை அடைந்து அடிதடிச்சண்டையில் முடிவுற்றதாகவும் இதனையடுத்து இருபகுதி இளைஞர்களையும் இராணுவத்தினர் விசாரணை நடத்தியுள்ளனர். (5)

## அரச தொலைக்காட்சி நிறுவனத்திற்கு எதிராக ஐ.தே.க.எம்.பி மனுத்தாக்கல்

(கொழும்பு)

அரசு தொலைக்காட்சி தகவல் ஒன்றிற்கு எதிராகக் கண்டி மாவட்ட ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் ஏ. எம். அப்துல் காதர் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்குதொடுத்துள்ளார்

மேற்படி தொலைக் காட்சி நிலையம் ஜனவரி 26 அல்லது அதற்கு அண்மித்த தினத்தில் கம்பளை இம்மாப் பள்ளிவாசல் இவருடைய பொறுப்பில் இருந்தபோது மோசடியில் ஈடுபட்டார் எனச் செய்தி வெளியிட்டுள்ளது.

இச்செய்தி சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வெளியாகியது என்றும் அது தனக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது என்றும் கூறிய இவர்மேற்படி ஸ்தாபனம் 10 கோடி ரூபாநஷ்டஈடு வழங்க வேண்டுமெனவும் வழக்குத் தாக்கல் செய்தார். (த)

## யாழ்.களஞ்சியத் திருட்டு விசாரணை 23ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகக் களஞ்சியத்தில் இடம்பெற்ற திருட்டுத் தொடர்பானவிசாரணை கடந்தவியாழக்கிழமை யாழ். நீதிமன்ற நீதிவான்க.விக்கினராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

யாழ். நீதிமன்றில் இடம்பெற்ற இவ் விசாரணையின் போது செயலகத்தின் களஞ்சியப் பொறுப்பாளர் விசாரிக்கப்பட்டதுடன், களஞ்சியம் தொடர்பான ஆவணங்களும் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இது தொடர்பான விசாரணை எதிர் வரும் 23 ஆம் திகதி மீண்டும்விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென தெரிவிக்கப்படுகிறது. (12-4)

## தடுத்து வைக்கப்பட்டோரை விடுவிக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு போதிய ஆதாரமின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களை விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபர் யாழ்.நீதி மன்றத்திற்கு அறிவுறுத்தல் அனுப்பிவைத்துள்ளார்.

முத்துலிங்கம் ஜெயகாந்தன், ரட்ணசிங்கம் விக்னேஸ்வரன், ஜோசப் அமலதாஸ், தேவதாஸ் றெயினோல்ட் றெயி, தேவதாஸ் இம்மானுவேல், தேவதாஸ் றொபின்சன், சிறில்செஷல்டன் நிரோஸ், குணரத்தினம் குணசீலன், ரட்ணசிங்கம் மணிவண்ணன் ஆகியோர் மீது குற்றம் சாட்ட போதிய ஆதாரம் இல்லாதபடியால் அவர்கள் விடுதலை செய்யப்படலாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (வ-12)

## விடுதலைப் புலிகளுக்கும் பாதாள குழுவிற்கும் இடையே தொடர்பு?

### புலனாய்வுத்துறை சந்தேகம்

(கொழும்பு)

தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாள உலக கும்பலைச் சேர்ந்த தடிபாலாவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்புகள் இருக்கலாம் என குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த தடிபாலா கொழும்பில் தேடப்பட்டுவந்த சமயம் மலையகத்தில் ஒளிந்து வாழ்ந்தார்.

அவ்வேளை அங்கு நிலைகொண்டிருந்த புலிகளுக்கும் தடிபாலா மற்றும் அவரது ஆட்களுக்கும் இடையே தொடர்புகள் ஏற்பட்டிருப்பதாகவும்,

தற்போதும் தடிபாலாவின் ஆட்கள் மலையகத்தில் ஒளிந்து வாழ்வதாகவும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதேசமயம், மலையகத்தில் ஒளிந்திருந்த சமயம் தடிபாலா கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ)

## அரச உத்தியோகத்தர் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

வடமத்திய மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துஅனுராதபுரத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

நேற்று காலை இடம்பெற்றஆர்ப்பாட்டத்தில்அரச உத்தியோகஸ்தர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டமையால் நேற்று நண்பகல் வரை அரச சேவைகள் ஸ்தம்பிதம்அடைந்திருந்தது.

இச் சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (வ-5)

## இராசி பலன்

19.10.2000
(ஐப்பசி 3, வியாழன்)
சஷ்டி காலை
6.12 வரை
சப்தமி
பி. இ 3.51 வரை
திருவாதிரை
பி.ப 4 43 வரை
ராகுகாலம்
1.32- 3.02
சுபநேரம்
7.32- 9.02
மரணயோகம்

**மேடம்**
நினைத்த காரியம் கைகூடும், இனிய சம்பவம், தனவரவு, குடும்ப சுகம்.

**இடபம்**
காரியத் தாமதம், கௌரவக் குறைவு, விதண்டாவாதம், தனவிரயம்.

**மிதுனம்**
நல்ல உணவு கிடைக்கும், புதிய பொருள் சேர்க்கை, புதிய சிந்தனை, சயன சுகம்.

**கடகம்**
சுப செலவு, காரியத் தாமதம், பிரயாணம், சுகக் குறைவு.

**சிங்கம்**
தன லாபம், உடல் நலம், சந்தோச மிகுதி, நண்பர்கள் சந்திப்பு.

**கன்னி**
முயற்சிகள் கைகூடும், மற்றவர்கள் கீழ்ப்படிவர், தொழில் அதிகாரம்.

**துலாம்**
தந்தை வழிஉறவு, அச்சம், எதிர்பாராத வருமானம்.

**விருச்சிகம்**
உடல் உபாதை, உறவினர் வெறுப்பு, பிரயாண பயம், கடன் தொல்லை.

**தனுசு**
வாகன வசதி, தனவரவு, சுவாரஸ்யம், கௌரவம்.

**மகரம்**
சந்தோசமான சம்பவம், தனவரவு, பகைவர் விலகுவார்கள், சுக வாழ்வு.

**கும்பம்**
மன அமைதியின்மை, வியாதி, காரிய இடையூறு, தாழ்வு நிலை.

**மீனம்**
பயந்த சுபாவம், தன்னம்பிக்கைக் குறைவு, இலட்சுமி கரம்.


(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

31-ம் நாள் நினைவஞ்சலியும்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



## அமரர் தவஜோதி கனகசபாபதி

19. 09. 2000 ல் அமரத்துவமடைந்த எனது அன்பு மனைவியின் வீட்டுக் கிருத்தியம் இன்று எமது இல்லத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறேன்.

இங்ஙனம்
அன்புடன்
பெ.கனகசபாபதி

சிவகாமி அம்மன் கோவிலடி,
இணுவில் கிழக்கு இணுவில்
(கி-888)

# புதிய வகுப்புகளுக்கான அனுமதி 2001

★ **வகுப்பு - 1**

**விண்ணப்ப முடிவு திகதி:**
2000 - 10 - 31

**நேர்முகத் தேர்வுத் திகதி:**
2000 - 11 - 11, 12

பல பெற்றோரின் வேண்டுகோளுக்கு இணங்க இவ்வருடம் முதல் முதலாம் வகுப்பில் பெண் பிள்ளைகளும் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளதால் அதற்கான விண்ணப்பங்களும்ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

★ **வகுப்பு - 6**

**விண்ணப்ப முடிவு திகதி:**
2000 - 10 - 31

**நேர்முகத் தேர்வுத் திகதி:**
2000 - 11 - 04, 05

புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். உயர் புள்ளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

★ **ஏனைய வகுப்புகள்**

**விண்ணப்ப முடிவு திகதி:**
2000 - 10 - 31

**நேர்முகத் தேர்வுத் திகதி:**
**தனித்தனியே அறிவிக்கப்படும்**

நிரந்தரமாக வெளி மாவட்டங்களுக்குச் சென்ற மாணவரதும், வரவின்மை காரணத்தால் நீக்கப்பட்ட மாணவரதும் குறிப்பிட்ட சில இடங்கள் மட்டும் வெற்றிடத்திற்கு ஏற்ப அனுமதி வழங்கப்படும்.

- கல்லூரியில் அலுவலக நேரத்தில் பெறப்படும் விண்ணப்பப் படிவத்தில் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.
- குறிப்பிட்ட திகதிகளின் பின் எவ்வித விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- திறமை அடிப்படையிலேயே முழு அனுமதிகளும் வழங்கப்படும்.

க. இராசதுரை
அதிபர்

(கி-889)

# ஆண்டு இறுதி பரீட்சையை வலய மட்டத்தில் நடத்த முயற்சி

(கோப்பாய்)

யாழ். கல்விவலயப்பாடசாலைகளுக்கிடையேயானஆண்டிறுதிப் பரீட்சைகள் வலய மட்டத்தில் நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இப் பரீட்சை தரம் 1, 2 தவிர்ந்த ஏனையதரங்களிற்கு பரீட்சை நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

க.பொ.த சாதரண மாணவர்களுக்கான பரீட்சை அடுத்த மாதம்1ஆம் திகதியும் மற்றைய மாணவர்களுக்கு அதே மாதம் 15 ஆம் திகதியும் பரீட்சைகள் இடம்பெறும்

தரம் 9 மாணவர்களுக்கு பரீட்சைகள் மாகாணக் கல்வி அமைச்சினால் நடத்தப்படவுள்ளன.

மேற்படி சகல பரீட்சைகள் தொடர்பானசுற்றறிக்கைகள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-த-79)

# தன்னிடமே கதையளந்த திருட்டுக்கும்பலை மடக்கிய முன்னாள் ஆசிரியர்

## தென்மராட்சியில் சம்பவம்

(நல்லூர்)

வீட்டு உரிமையாளரிடமே, அவருக்கு வேண்டியவர்கள் எனக்கூறி களவெடுக்க முனைந்த திருட்டுக்கும்பலை புத்திசாதுரியமாக மடக்கிப் பிடித்து நல்ல 'சாப்பாடும்' பெற்றுக் கொடுத்தாராம் முன்னை நாள் ஆசிரியர் ஒருவர்.

தென்மராட்சியில் நடந்த இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது.

தென்மராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வேறு இடத்தில் வசித்துவந்த விவசாய ஆசிரியர் ஒருவர், நீண்ட நாளின் பின் தன் வீடு பார்க்கச் சென்றிருந்தார்.

அங்கோ, வீட்டுக்கு உரித்துடையவர்கள் போல் நடந்து கொண்ட சிலர், பயன்தரு பழமரங்களில் தமது கைவரிசையைக் காட்டியதுடன், வீட்டுப்பொருட்களை சேகரித்து எடுத்துச் செல்வதிலும் ஈடுபட்டிருந்தனர்.

இதனைக் கண்டு, வீட்டு உரிமையாளர் ஆச்சரியமடைந்த போதிலும், அவர்களிடம் பேச்சுக்கொடுத்த போது, வீட்டின் உரிமையாளரே தம்மை அனுப்பியதாய் கூறினர்.

கள்வர்களின் தந்திரத்தைப் புரிந்துகொண்ட ஆசிரியர், தன்னையும் வீட்டு உரிமையாளரே பொருட்களை எடுத்துவர அனுப்பினார் எனக்கூறினாராம்.

இதனை நம்பிய கள்வர்குழு அவருடன் சேர்ந்து வீட்டுப் பொருட்களை அபகரிப்பதில் ஈடுபட்ட வேளை, சாதுரியமாய் அவர்களை வீட்டிற்குள் விட்டுப் பூட்டியதுடன், அயலவர்களுக்கு குரல் கொடுத்து விடயத்தை அம்பலத்துக்கு கொண்டுவந்தார்.

பிறகென்ன, ஒன்று சேர்ந்த அயலவர்கள் திருட்டுப்புத்திக்காரர்களுக்கு 'நல்ல சாப்பாடு' கொடுத்து அனுப்பினர். (உ-103)

# ஹற்றன் பகுதியில் புதிய எம். பி 25 வருடங்களின் பின்னர் தெரிவானார்

(கொழும்பு)

ஹற்றன் பகுதியில் 25 வருடங்களின் பின்னர் புதிய பாராளுமன்ற உறுப்பினர்ஒருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பொ.ஜ.ஐ.முன்னணியுடன் இணைந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைமையின் கீழ் போட்டியிட்ட எஸ். பி. ஜெகதீஸ்வரன் என்பவரே ஹற்றன் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டவர் ஆவர்.

1970 ஆம் ஆண்டு மஸ்கெலியா தனிப்பகுதியாக இருந்த போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் [illegible]

செய்யப்பட்டிருந்தார்.

அதன் பின்னர் நுவரெலியா மற்றும் ஏனைய இடங்களிற்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்ட போதும், ஹற்றனுக்கு இதுவரை எவரும் தெரிவுசெய்யப்படவில்லை.

அதனால் ஹற்றன் மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதில் பெரும் அவல நிலைகளை எதிர்நோக்கியிருந்தனர்.

தற்போதுமேற்படி பாராளுமன்ற உறுப்பினர் தெரிவாகியிருப்பது ஹற்றன் மக்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சி [illegible]

உள்ளூராட்சி தேர்தல்கள்

# உடன் நடத்தப்பட வேண்டும்

# பிரஜைகள்குழு ஜனாதிபதிக்கு மகஜர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை உடனடியாக நடத்தி, ஜனநாயக மரபுகளைக் கட்டிக் காக்க வேண்டும்.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றினை, கரவாகு வடக்கின் பிரஜைகள் குழுவினர் ஜனாதிபதி உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

வடக்கு-கிழக்கில்நீண்டநாட்களாக உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படவில்லை.

மாகாணசபைஉள்ளூராட்சி மன்றங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இன்மையால் சகல அதிகாரங்களும் அரச அதிகாரிகள் கையில் உள்ளதால், அடிமட்ட மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படுவது கேள்விக்குறியாகியுள்ளது.

நாட்டில்நிலவும்அசாதாரண சூழ்நிலைகளுக்கு மத்தியில் இரண்டு தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது.

அவ்வாறானால், ஏன் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட முடியாது எனவும் அம்மகஜரில் வினா எழுப்பப்பட்டுள்ளது. (உ)

# புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

[வவுனியா]

நாகர்கோவில், மட்டுவில் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் உயிரிழந்த எல்லைப்படை வீரர்களான

- பொன்னையா இராசேந்திரம்
- அமலநேசன் (இரணதீவு)

ஆகிய வீரர்களும் மணலாற்றுப் பகுதியில் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில்

- வெள்ளைச்சாமி விஜயசங்கர் (மட்டக்களப்பு)

என்ற போராளியும் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (க)

# உடுவிலில் திருத்த பணிகள்

(அரியாலை)

உடுவில் பிரதேச செயலக சுற்று மதில் மெருகூட்டும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

அதேவேளை உடுவில் பகுதி வீதியோரப் பற்றைகள் உடுவில் உபஅலுவலகத் தொழிலாளர்களால் வெட்டப்பட்டு துப்புரவு செய்யப்படுகின்றது. (த-106)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

செங்கையாழியானின் 'மரணங்கள் மலிந்த பூமி' நாவல் வெளியீட்டு விழாஇம்மாதம் 22 ஆம் திகதி ஞாயிறு காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இலக்கிய வட்டத் துணைத் [illegible]

# வெளியூர் தபால்கள் வந்தன விநியோக பணி இன்று

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்கப்பல் மூலம் யாழ் குடா நாட்டுக்கான வெளியூர் தபால்கள் அடங்கிய89 தபால் பொதிகள் நேற்றைய தினம் எடுத்துவரப்பட்டதாக யாழ்.தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி தபால்கள் தரம் பிரிக்கப்பட்டு இன்று விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தபாலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

யாழ்.குடா நாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர்களுக்கான தபால்கள் அடங்கிய 79 தபால் பொதிகளும் இக்கப்பலில் அனுப்பப்படவுள்ளதாகவும் அறியப்படுகிறது. இதேவேளை,

தடைப்பட்டிருந்த விமான மூலமான தபால் சேவை கடந்த திங்கள் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. [க-03[

# செவனகல பகுதியில் மோதல் ஒருவர் பலி; இருவர் படுகாயம்

(கொழும்பு)

செவனகல பொலிஸ் பிரிவில் இன்டிவல ஹலிச பகுதியில் கொள்ளைக்கோஷ்டியினருக்கும், கிராம மக்களிற்கும் இடையே நடைபெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த பகுதியில் சட்டவிரோதமாக மதுபானம் தயாரிக்கும் இடம் ஒன்றுக்கு பொலிஸார் என கூறிவந்த இக்கோஷ்டியினாலேயே மேற்படி மோதல் இடம்பெற்றுள்ளது.

இம் மோதலில் மேலும் இருவர் படுகாயமுற்று கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தோரின் நிலை கவலைக்கிடமானதாகவுள்ளது என வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவம் தொடர்பாக நான்கு பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக செவனகல பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க-த)

# கொழும்பில் வாகனங்கள் கொள்ளை இருவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கொழும்பில் திட்டமிட்டு வாகனங்களை கொள்ளையிட்ட இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சுமார் 36 லட்சம்பெறுமதியான வாகனங்களை இவர்கள் கடத்தியுள்ளனர்.

பொறளை கழுவ, மகறகமுவ உட்பட பல பகுதிகளில் [illegible]

வீர' தெரிவித்துள்ளார்.

இதேவேளை இவர்களால் கொள்ளையிடப் பட்டதாக கூறப்படும் மோட்டார் சைக்கிள்கள் பலவற்றையும்பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தெஹிவளையில் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட நபர் மூலம் கிடைக்கப்பட்ட [illegible]

சுதந்திரக் கட்சி சார்பில் காமினி குணதிலக பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு

மத்தியில் பெரும் மகிழ்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது.

(த)

## கைவிடப்பட்ட நிலையில் தோட்ட சேவையாளர் வீடுகள்

(நுவரெலியா)

மலையகப் பிரதேசங்களில் தோட்டச் சேவையாளர்களின் குடியிருப்புகள் பல கைவிடப்பட்ட நிலையிலும் பராமரிப்பற்ற நிலையிலும் காணப்படுகிறது.

பல இலட்சம் செலவில் புனரமைக்கப்படும் மேற்படி வீடுகள் தோட்ட தொழிலாளர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெறும்போது அல்லது இடமாற்றம் பெறும்போது பராமரிப்பற்று காணப்படுகிறது.

பாதுகாப்புகள் சரியாக வழங்கப்படாததால் கூரைகள், யன்னல்கள், வீட்டுக் கதவுகள், தண்ணீர் குழாய்கள் என்பன இனம்தெரியாதோரால் திருடப்படுகின்றன.

தோட்ட நிர்வாகம் இது விடயத்தில் போதிய கவனம் எடுக்காமையால் இப் பகுதிகளில் வெற்றிடங்களும் நிரப்பப்படாமல் உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

(க-த)

---

## கௌரி பூஜை

(கோப்பாய்)

கோப்பாய் மத்தி காளியம்மன் ஆலயத்தில் தினமும் கௌரி பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றது.

(செ-79)

## வாராந்த நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரின் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப10.30 மணிக்கு ச.நவரத்தினராசவேலின் அறிமுகவுரையைத் தொடர்ந்து ''சைவம் ஓர்வாழ்க்கை முறை'' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் க.சிவானந்தமூர்த்தி சொற்பொழிவாற்றவுள்ளார்.

(செ)

தலைவர் மூதறிஞர் தி. ச. வரதராசன் தலைமையில் மேற்படி நிகழ்வு நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக உயர் மட்டப்பீடாதிபதி பேராசிரியர். அ. சண்முகதாஸ் வெளியீட்டுரையும், யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன், சிற்பி. சிவ. சரவணபவன், செம்பியன்செல்வன் முதலியோர் மதிப்பீட்டுரையும் நிகழ்த்தவுள்ளனர்.

ஓய்வு பெற்ற பிரதி அதிபரும், நூலாசிரியரின் குருவுமான க. சிவராமலிங்கம் இந் நிகழ்வில் முதற் பிரதியினைப் பெற்றுச் சிறப்பிக்கவுள்ளார். [த]

## விபரம் கோரல்;

(மந்திகை

கட்டைவேலி, நெல்லியடி ப.நோ.கூ.சங்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தரம்- 05 புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் விபரம் கோரப்பட்டுள்ளது.

பரீட்சையில் சித்தியடைந்தவர்களை கௌரவித்து அவர்களுக்கான பரிசில்களை வழங்குவதற்காகவேமேற்படி விபரங்கள் கோரப்பட்டுள்ளதாக சங்க தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

(க-23)

முல் உட்பட பல பகுதிகளில் இருந்து இவர்களால்கடத்தப்பட்ட வாகனங்களை தெஹிவளைபொலிஸ் குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி 'கீர்த்திரண

பட்ட தகவல்களையடுத்தே மேற்படி நபர்களை கைது செய்ய முடிந்ததாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(க-த)

## கட்சிக் கட்டுப்பாட்டை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

கட்சியின் கட்டுப்பாட்டை மீறுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய ஐக்கிய முன்னணியின் செயலாளர் ரவூப்ஹக்கீம் எச்சரித்துள்ளார்.

கட்சியைச் சீர்குலைப்பதற்கு சில தீய சக்திகள் முயன்று வருகின்றன் இதற்கு கட்சியின் கட்டுக்கோப்பை மீறுவோர்சிலர்உடன்பாடாயிருந்து வருகின்றனர்.

கட்சியின் கட்டுப்பாட்டை மீறிய மூவரை இடைநிறுத்தவுள்ளதாகவும் அவர்தெரிவித்துள்ளார்.

இதேசமயம், தேசிய ஐக்கிய முன்னணி இரண்டாகப் பிளவுண்டதும், அவற்றில் ஒன்றான பேரியல் அஷ்ரப் தலைமையிலான அணி, புதிய அரசை அமைப்பதற்கு சந்திரிகா அரசுக்கு நிபந்தனையற்ற முழு ஆதரவு வழங்க முன்வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(உ)

## 10 இலட்சம் ரூபா செலவில் பல.நோ. கூட். சங்க களஞ்சியம்திருத்தம்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் களஞ்சியகட்டிடம் ஒன்று பத்து லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப் படவுள்ளதாக மேற்படி கூட்டுறவு சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மாதகல் வீதி பண்டத்தரிப்பில்உள்ள களஞ்சிய பகுதியே திருத்தப்படவுள்ளது. கூரை வேலைகளுக்கு மட்டும் 7 லட்சம் ரூபாவை தொண்டர்நிறுவனம் ஒன்று வழங்க முன் வந்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-12)

## முல்லைத் தாக்குதலில் 94 வீடுகள் பலத்த சேதமடைந்தன

(முல்லைத்தீவு)

கடந்த சனிக்கிழமை விமானப்படையினரின் யுத்த விமானங்கள் முல்லைத்தீவில் நடத்திய தாக்குதல்களில் 94 வீடுகள் முற்றாக சேதமடைந்திருப்பதாகதெரியவந்துள்ளது.

இதனால் மேற்படி வீடுகளில் வசித்து வந்த442 பொதுமக்கள் இருப்பிடமின்றிஅவதியுறுவதாகவும்சிலர் பாடசாலைகளில் தஞ்சமடைந்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,

மேற்படி சம்பவத்தில் 5 பொதுமக்கள்படுகாயமடைந்தமை தெரிந்ததே. (உ)

## யாழ்ப்பாண பொதுசன நூலகம் விரைவில் கணனி மயமாகும்?

### அமைச்சா மட்டத்தில் முயற்சி

(கொழும்பு)

யாழ்ப்பாண பொதுசன நூலகத்தை கணனி மயப்படுத்தும்நடவடிக்கைகள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அரச உயர்மட்டத் தகவல்கள் தெரிவித்துள்ளன

இதுவிடயம் தொடர்பான முயற்சிகளை வெளியுறவு அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் மேற்கொண்டு வருவதாக மேலும் அறியப்படுகிறது.

நோர்வே அரசாங்கத்திடம் இவ் உதவி கோரப்பட்டதாகவும் மேலும் அறியப்படுகிறது.

மேற்படி நூலகம் 1981ம் ஆண்டு எரியூட்டப்பட்டதையடுத்து நூலக சேவைகள் சில காலம்யாழ்ப்பாணத்தில் தடைப்பட்டதும் தற்போது இச்சேவை பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி நூலக பணிகள் தற்போது இடம் பெற்றுவருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# காத்தான்குடி பிரதேசத்தில் நேற்றுபூரணஹர்த்தால்அனுஷ்டிப்பு

### கடைகள்,வங்கிகள்,பாடசாலைகள் மூடப்பட்டன

(காத்தான்குடி)

காத்தான்குடி பிரதேசத்தில் நேற்று பூரணஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது தேசிய ஐக்கிய முன்னணியிலோ, பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பட்டியலிலோ தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் நியமனம் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ்விற்கு வழங்கப்படாதது குறித்து வன்மையான கண்டனத்தைத் தெரிவித்தே மேற்படி ஹர்த்தால் அனுஷ்டிக்கப் படுவதாக முஸ்லிம் இளைஞர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

மேற்படி ஹர்த்தாலினால் கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. வங்கிகள், பொதுச் சந்தைகள் உட்பட அனைத்தும் இழுத்து மூடப்பட்டிருந்ததுடன் பெரும்பாலான பாடசாலைகள் இயங்கவில்லை.

பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போதிலும், எவ்வித பிரச்சினைகளுமின்றி அமைதியான முறையில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

முன்னாள் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ்விற்கு எவ்வாறாவது தேசியப்பட்டியல் மூலம் எம்.பி.நியமனம் வழங்கப்பட வேண்டும்மென கிழக்கு மாகாண முஸ்லிம்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

தேசிய ஐக்கிய முன்னணி இணைத்தலைவர் றவூப்ஹக்கீமுக் கெதிரான கோஷங்கள் பரவலாக எழுப்பப்பட்டதையும் அவதானிக்க முடிகின்றது.

கட்சிபேதமின்றி சகலரும் ஹர்த்தாலுக்கு ஒத்துழைப்பு வழங்கியதாக மேலும் அறியப்படுகிறது. (க-60)

## வீதி சீரின்மை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சியிலிருந்து மருதங்கேணி வரையிலான வீதி கவனிப்பாரற்ற நிலையில் உள்ளதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

இவ்வீதி சீரின்மை குறித்து உரியவர்களிடம் பலதடவைகள் எடுத்துக் கூறியும் உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக தெரியவில்லையென பொதுமக்கள் தரப்பில் புகார் தெரிவிக்கப்படுகிறது. (க-43)

## கணனி பயிற்சி நெறி

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு கல்வி பண்பாட்டு அமைச்சினால் இளைஞர், யுவதிகளிற்கு கணனி பயிற்சி நெறி வழங்கப்படவுள்ளது.

திருகோணமலை, உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் மேற்படி கணனிப் பயிற்சி நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் 18 வயதிற்கும், 20 வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர் யுவதிகள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

### கண்டி பிரதிபொலிஸ் அதிபரை

# கொலை செய்யும் முயற்சியில் உயர் அதிகாரிகளும் சம்பந்தம்

### புலனாய்வு தகவல்கள தெரிவிப்பு

(கொழும்பு)

அண்மையில், கண்டி பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகம் முன்னால் குழப்பம் விளைவித்த குழுவில் பொலிஸ் அதிகாரிகளும் இருந்ததாக விசேட புலனாய்வு தகவல்கள் தெரிவித்துள்ளன.

விசேட பொலிஸ் அதிரடிப் படையினர் உட்பட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் மெய்க் காப்பாளர் உள்ளிட்ட பலர் சாதாரண உடையில் இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 12ஆம் திகதி, புதன் கிழமை வாகனத்தில் வந்த குழுவினர் கண்டி பொலிஸ்மா அதிபர் அலுவலகம் முன்னால் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியும், பட்டாசு கொளுத்தியும் ஆர்ப்பாட்டம் விளைவித்தமை தெரிந்ததே.

இதேசமயம், கண்டி பொலிஸ்மா அதிபரை கொலை செய்ய திட்டமிட்டது உட்பட மூன்று குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியதன் பேரில், பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்தையின் மகன் இம்மாதம் 27 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## நோயாளர் கப்பலில் கொழும்பு சென்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு சர்வதேச செஞ்சிலுவைக் கப்பல் மூலம் நேற்று 41 நோயாளர்கள் சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதேவேளைசிகிச்சைக்காக கொழும்பு சென்ற 30 நோயாளர்கள் இக்கப்பல் மூலம் நேற்று அழைத்து வரப்பட்டனர். (வ-12)

## அமைச்சர் ஜப்பான் பயணம்

(கொழும்பு)

இலங்கை வெளிவிவகார அமைச்சர்லஷ்மன் கதிர்காமர் எதிர்வரும் சனிக்கிழமை 5 நாட்கள் பயணமாகஜப்பான் புறப்படவுள்ளார்.

இவர்ஜப்பான்வெளிநாட்டு அமைச்சருடன் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். (க-த)

### கிளிநொச்சி மாவட்டத்தில்,

# கடந்த 6 மாதங்களில் 37 ஆயிரம் வெடிப்பொருட்கள் மீட்கப்பட்டன

(கொழும்பு)

இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து கிளிநொச்சி மாவட்டம் விடுவிக்கப்பட்டபின், 37 ஆயிரம் வெடிப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் வெண்புறா அமைப்பு கடந்த ஏப்ரல் மாதம் முதல் இம்மாதம்வரை நடத்திய புள்ளிவிபர அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட வெடிப் பொருட்களில், இரண்டாயிரம் எறிகணைகள், ஆயிரம் கிளைமோர் கண்ணிவெடிகள், 500 இற்கு மேற்பட்ட பொறிவெடிகள், ஆயிரம் கைக்குண்டுகள் என்பனவும் அடங்கும்.

இதேவேளை,

கிளிநொச்சி மாவட்டத்தில், இவ் வெடிப்பொருட்களால் 10 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டும் 75 இற்கும் மேற்பட்டோர் காலை இழந்தும் 100 பேர் வரை காயமடைந்தும் உள்ளதாகவும், அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-உ)

## அடுத்த மாதம் கொடிதினம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இம்மாதம் 20 ஆம் திகதி முதல் அடுத்

## கொடுப்பனவுகள் வழங்கல்

(மந்திகை)

மருதங்கேணி பிரதேச

### தமிழ் வேட்பாளர்கள்

தை 20 ஆம் திகதி முதல் அடுத்தமாதம் 20 ஆம் திகதி வரை கொடிவாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ்.குடாநாட்டில் இடம்பெற்றுவரும் யுத்த அனர்த்தத்தால் இடம் பெயர்ந்துள்ள மக்களின் சுகாதாரம் மற்றும் முதலுதவி கல்வி வசதிக்காகவும், யாழ். மாவட்ட மக்கள் நலன்புரிச் சங்க உயர்ச்சிக்காகவும் இக்கொடிதினம் நடத்தப்படவுள்ளது.

அரசதிணைக்களம் மற்றும் பொது இடங்களிலும் இக்கொடித்தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. (க-03)

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் மற்றும் காசநோய் ஆகியவற்றிற்கான கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

உபயகதிர்காமம் வீதியில் அமைந்துள்ள நாகர்கோவில் உப-தபாலகத்தில் மேற்படி கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவருகின்றன.

செம்பியன் பற்று, தாளையடி, ஆழிய வளை ஆகிய உப தபாலகங்களில் ஓய்வூதியம் பெற்றவர்களும் தற்போது மேற்படி தபாலகத்தில் இவ் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-23)

## அழுகிய நிலையில் பெண்ணின்சடலம்

(கொழும்பு)

இரத்தோட்டை ஒப்பல்கல தோட்டத்தில் அழுகிய நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குடாஓயா குடியிருப்புத்திட்டத்தைச்சேர்ந்த 52 வயதான பெண்மணி ஒருவருடைய சடலமே இவ்வாறு மீட்கப்பட்டிருப்பதாய் தெரியவந்துள்ளது.

பிரேத பரிசோதனைகளை நடத்திய மரணவிசாரணை அதிகாரி கொலை என தீர்ப்பளித்துள்ளார். (உ)

## ஆயுள்வேத மூலிகை

(திருகோணமலை)

திருகோணமலை நகராட்சி மன்றம் அமைந்துள்ள காணியில் ஆயுள்வேத மூலிகைத் தோட்டம் ஒன்று உருவாகிவருகின்றது.

இதன் மூலம்கிடைக்கும்மூலிகைகளிலிருந்து ஆயுள்வேத மருத்துவ மனைகளிற்கு அதிகளவு மருந்துகள் தயாரிக்கப்படும் என நகராட்சி மன்ற செயலாளர் எஸ். சோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

(த)

# கொழும்பில் தோற்கடிக்கப்பட்டமை தமிழருக்குக் கிடைத்த தோல்வியே

## - தமிழர் நற்பணி மன்றம் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில், பொதுத்தேர்தலில் போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்கள் அனைவருமே தோல்வியடைந்துள்ளனர். இது போட்டியிட்டவர்களுக்கு மட்டும் கிடைத்த தோல்வியல்ல. அங்கு வாழும் அனைத்து தமிழர்களுக்குமே கிடைத்த ஒட்டுமொத்தத் தோல்வியாகும்.

இவ்வாறு கொழும்புமாவட்டத்தில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட முன்னாள் எம்.பி. யோகராஜன் தோல்வியடைந்தமை தொடர்பாக தமிழர் நற்பணிமன்றம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக்குறிப்பில் மேலும்; கொழும்பு வாழ் தமிழர்களின் நலனுக்காக பாடுபட்டஒருவர் நிராகரிக்கப்பட்டமையானது தமிழர்களின் எதிர்கால வாழ்வையே கேள்விக்குறிய க்கியுள்ளது.

ஏனைய இன மக்கள் இன நலனைக் கருத்தில்கொண்டு தமது வாக்குகளை மிகவும் பிரயோசனமாகப் பிரயோகித்தபோதும் கொழும்பு வாழ் தமிழர்கள் தேசிர நலனைக் கருத்தில்கொண்டு தமது வாக்குகளைப் பிரயோகித்த செயலே இவ் கேள்விக்கு யான நிலைக்கு இட்டு வந்திறிக்கிறது.

இத்ரு தோல்வியால் பறிபோனது தமிழர் பிரதிநிதித்துவம் மட்டுமல்ல தமிழர்களின் உரிமையும் நிம்மதியுமாகும் எனவும் அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முன்னாள் எம்.பி. யோகராஜனுக்கு தேசியப்பட்டியல் மூலம் எம்.பி. பதவி வழங்க பொது ஜன ஐக்கிய முன்னணி தீர்மானித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (க-உ)

# யாழ். நகரில் சூடுபிடித்துள்ள தீபாவளி பண்டிகை வியாபாரம்

(அரியாலை)

யாழ்நகரின் பகுதிகளில் தீபாவளியை முன்னிட்டு மக்கள் சனநடமாட்டம்அதிகரித்துக் காணப்படுகிறது..

தனியார் போக்குவரத்து வாகனங்களும், வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களும் ஈடுபட்டுள்ளன.

யாழ்குடாநாட்டில் கடந்த சில தினங்கள் நிலவிவரும் அமைதிநிலையை தொடர்ந்து தீபாவளி பண்டிகை மக்களிடையேசூடுபிடித்துள்ளது. (த-106)

இன்று ஒரு தகவல்

# மூட நம்பிக்கைகளும் முட்டாள் கொள்கைகளும்

கர்நாடகத்தில் கடுமையாக ஆசாரங்களைக் கடைப்பிடிக்கும் ஒரு அக்கிர ஹாரத்தில் பிராணேசாசாரியா என்ற பிராமணர் வாழ்ந்துவந்தார். அவர்வேதங்களைக்கற்றபண்டிதர். பழங்கால பழக்க வழக்கங்களுக்கும், கடும் ஆசாரங்களுக்கும் கட்டுப்பட்டவர். அவரது மனைவி பக்கவாதத்தால் கால்கள் செயலற்றுப் போனாள். அதனால் அவளுக்கு அவர் பணிவிடை செய்து வந்தார்.

அதே அக்கிரஹாரத்தில் நாராயணப்பா என்ற இன்னொரு பிராமணரும் இருந்தார். அவர் நெறிதவறி ஆசாரங்களுக்குக் கட்டுப்படாமல் மதுவை அருந்தியும், மாமிசத்தை உண்டும், பெரியவர்களைச் சற்றும் மதியாமலும் இருந்து வந்தார். அவர் சந்திரி என்ற அழகான பெண்ணைத் தன் வீட்டோடு திருமணம் செய்யாமல் வைத்திருந்தார்.

ஒருநாள் நாராயணப்பா திடீரென இறந்து போனார். சந்திரி இதனை பிரணேசாசாரியாவுக்குத் தெரியப்படுத்தி ஈமச்சடங்குக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு வேண்டினாள். ஆனால் அது ஒரு சிக்கலான பிரச்சினை ஆயிற்று.

நாராயணப்பா பிராமண ஆசாரங்களை மீறியதால், ஆசார சீடர்களான பிராமணர்கள் அவரது உடலைத் தொடலாமா என்ற பிரச்சினை எழுந்தது. அவருக்கு ஈமக் கிரியைகளைச் செய்வது பற்றி பெருத்த விவாதம் மூண்டது.

நாராயணப்பாவின் சந்திரி தன் நகைகளை எல்லாம் பிராமணர்களின்முன் வைத்து நாராயணப்பாவின் பூத உடலுக்கு தகனக்கிரியைகளைச் செய்யும்படி வேண்டினாள். ஆனால் பிராமணர்கள் அவரது வேண்டுகோளை ஏற்கத் தயங்கினார்கள்.

இதற்கு வழிகான பிராணேசாசாரியாவே சாஸ்திர நூல்களைப் புரட்டிப்பார்த்தார். அப்போது அவருக்கு எவ்வழியும் தெரியவில்லை. சந்திரியிடம் அவர் நகைகளை எடுத்துக்கொண்டு போகும்படி கூறிவிட்டு அவர் அவ்வூர் கோவிலுக்குள் போய் அமர்ந்து யோசிக்கலானார். அவருக்கு எதுவும் தோன்றாததால் தம் வீட்டிற்குத் திரும்பலானார். வழியில் சந்திரியைக் கண்ட அவர் அவள் மீது இரக்கம் கொண்டார். அவள் பயபக்தியுடன் அவரது கால்ககளில்விழுந்து வணங்கினாள். அவர் அவளைஅன்புடன் தொட்டுத் தூக்கினார். அப்போது அவருக்குக் சந்திரி மீது ஆசை ஏற்பட்டது.

'சந்திரியைத் தொட்டபின் தன்னை பிராமணன் எனக் கூறிக்கொள்ள தனக்குத் தகுதி உள்ளதாஎன்று' பிராணேசாசாரியா யோசிக்கலானார்.

சந்திரி பிராமணரல்லாதவர்களிடம்போய் நாராயணப்பாவிற்கு ஈமச்சடங்குகளைச் செய்யும்படி வேண்டினாள்.

அவர்களோ! ஆசாரங்களை மீறிய ஒரு பிராமணருக்கு ஈமச்சடங்குகளைத் தாம் செய்வது மகாபாவம் எனக் கூறி மறுத்துவிட்டார்கள்.

கடைசியில் சந்திரி ஒரு முஸ்லிமின் உதவியோடு நாராயணப்பாவின் உடலுக்கு ஈமக் கிரியைகள்செய்வதுஎன முடிவு எடுத்து அதனையே செய்து முடித்தாள் அவர்களாலே நாராயணப்பாவின் உடல் புதைக்கப்பட்டது.

பிராணேசாசாரியாவின் மனைவி இறந்துபோனாள். தான் குற்றம்புரிந்து விட்டதாக எண்ணி அதன்பிறகு பிராணேசாசாரியா ஊரை விட்டு தேசாந்தரம் போய் விட்டார்.

கன்னடத்தில் பிரபல எழுத்தாளர் எஸ். ஆர். ஆனந்தமூர்த்தி 1931 இல் ஆசாரம் என்ற பெயரிலுள்ள மூடநம்பிக்கைகளை விளக்க இந்த கதையை எழுதினார். இது ஓர் உண்மைச்சம்பவம்.

நன்றி
அம்புலிமாமா

## ஆவணங்கள் மீட்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரியில் இயங்கிய தென்மராட்சி பிரதேச செயலகத்தில்கைவிடப்பட்டநிலையில் இருந்த ஆவணங்களும், தளபாடங்களும் அங்கிருந்து அண்மையில் மீட்டெடுக்கப்பட்டுக் கொண்டு வரப்பட்டுள்ளன.

இவை தற்போது இணுவிலில் இயங்கிவருகின்ற தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் பாவிக்கப்பட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது. (க - 77)

## தொடரும் கட்டிட பணிகள்

(கோப்பாய்)

கோப்பாய் மத்தி வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலயத்தின் வடமேற்குப்பக்கமாக மகாலட்சுமிக்கான கோயில் கட்டிடப் பணிகள் நடைபெறுகின்றன.

இவ்வாலயத்திற்கான கும்பாபிஷேகத்தை அடுத்த ஆண்டு தை மாத மளவில் நடத்தவுள்ளதாக ஆலய பிரதம குருக்கள் தெரிவித்துள்ளார். (த-79)

## கணனிக் கல்வி ஆசிரிய ஆலோசகர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில், கணனிக்கல்விக்கான ஆசிரிய ஆலோசகர்களை நியமிப்பதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் 5 வருட கற்பித்தல் அனுபவமுள்ள பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். (உ)

## அதிபர்கள் இடமாற்றம்

(கோப்பாய்)

கோப்பாய்க் கோட்டத்திலுள்ள இரண்டு பாடசாலைகட்கு இம் மாதம் 1ம் திகதி தொடக்கம் புதிய அதிபர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

புத்தூர் மெதடிஸ் மிசன் அதிபர் அ. பூபாலசிங்கம் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்துக்கும், அச்செழு மெதடிஸ் மிசன் பாடசாலை அதிபர் க. நடனபாதம் தோப்பு அருள் நந்தி வித்தியாலயத்துக்கும், இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## கம்பி வேலிகள் வெட்டப்பட்டு கால் நடைகள் திருட்டு

(கோப்பாய்)

கோப்பாய் மத்திய பகுதியில் இரவு வேளைகளில் கம்பி வேலிகளை குறடுகளால் வெட்டி கால் நடைகளைக் கவர்ந்து செல்லும் திருடர்கள் அதிகரித்து வருகின்றனர்.

இதனால் இப்பகுதி மக்களுடைய இர்வுப் பொழுது பெரும் அச்சம்நிறைந்ததாகக் காணப்படுகிறது.

சில வீட்டுக் காணிகளில் அருகிலுள்ள கம்பிவேலிகள் பகல் வேளைகளில் வெட்டப்பட்டு இரவு திருட்டுகளிற்கு வசதியாக திருடர்களால் பாதை அமைக்கப்படுகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-த-79)

## விடுமுறை தினங்களிலும் வர்த்தக நிலையங்கள் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு கட்ந்த 14-ம்திகதி தொடக்கம் 26-ம் திகதிவரை சகல சனி, ஞாயிறு தினங்களிலும், அரச விடுமுறை தினங்களிலும் சகல வர்த்தக ஸ்தாபனங்களும் திறந்து வியாபாரம் செய்வற்கு அனுமதிக்கலாமெனத வும், அப்படித் திறந்து வியாபாரம் செய்யும் வர்த்தகநிறுவனங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்படவேண்டுமெனவும் 14-ம் திகதி அன்று நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகயாழ் வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (க)

## 3 அமைச்சர் பதவி தந்தால் ஐ. தே. கட்சிக்கு ஆதரவளிப்போம்!

### ரணிலிடம் ஹக்கீம் நிபந்தனை

(கொழும்பு)

மூன்று அமைச்சர் பதவிகள், இரண்டு பிரதியமைச்சர் பதவி மற்றும் நான்கு தேசியப்பட்டியல் அங்கத்துவம் போன்றவற்றை தமது கட்சிக்கு வழங்கினால் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவு வழங்க தாயாராகவுள்ளதாக தேசிய ஐக்கிய முன்னணியின் துணைத்தலைவர் ரவூப் ஹக்கீம் உறுதியளித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ரவூப் ஹக்கீமை சந்தித்து தமது கட்சிக்கு ஆதரவு வழங்குமாறு கோரியதை அடுத்தே அவர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

தேசிய ஐக்கிய முன்னணி பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு நிபந்தனையுடன் ஆதரவு வழங்குவதற்கு 10 நாட்கள் அவகாசம் விதித்துள்ள நிலையில் ஐக்கியதேசியகட்சி ரவூப் ஹக்கீமிடம் இந்த ஆதரவை கோரியுள்ளமை ஆட்சிப் பீடத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்துவதற்குரிய அறிகுறியென அரசியல் நோக்குநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர், (ந-4)

## அரசியலிலிருந்து ஒதுங்கமாட்டேன் முன்னாள் பிரதி அமைச்சர் உறுதி

(கொழும்பு)

பொதுத் தேர்தலின் போது சொற்ப வாக்குகளினால் தோல்வியைதழுவிக்கொண்டபோதும், அரசியலிலிருந்து விலகபபோவதில்லையென முன்னாள் பிரதி அமைச்சர் 'எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா உறுதிபட தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்காமுஸ்லிம்காங்கிரஸினைவளர்ப்பதில் மட்டக்களப்புமாத்திரமன்றிஅனைத்து இலங்கையின் பகுதிக்கு... தேசிய ஐக்கிய முன்னணியை கட்டியெழுப்ப ஊன்றுகோலாகஇருக்கப்போவதாகவும் கூறியுள்ளார்.

அதேவேளை தமக்கு வாக்களித்த அனைத்து மக்களிற்கும்ஹிஸ்புல்லா தனதுநன்றியறிதலைத் தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த தேர்தலின்போது 500 வாக்குகளினால் இவ்வமைச்சர் தோல்வியை தழுவிக்...

## தோல்வியடைந்தவர்கட்கும் எம்.பி. பதவி வழங்குவதா?

### பொ. ஜ. ஐ. மு. பிரமுகர்கள் சீற்றம்

(கொழும்பு)

பொதுத்தேர்தலில் தோல் ... 11 பிரதியமைச்சர்கள், மற்றும் 22 பாராளுமன்ற உறுப்...

பொதுத்தேர்தலில் தோல்வியடைந்தவர்களுக்கு தேசிய பட்டியலில் இடமளிக்கக் கூடாதென பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் ஜனாதிபதி சந்திரிக்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நடந்துமுடிந்த பொதுத் தேர்தலில், 4 அமைச்சர்கள், றும் 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் தோல்வியடைந்துள்ளார்கள்.

இவர்களில் பலர் தேசியப் பட்டியல் மூலம் தங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்குமாறு கோரியதையடுத்தே பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரமுகர்கள் இக் கோரிக்கை விடுத்துள்ளனர். (-4)

# தேர்தல் முறைகேடுகள் தொடர்பாக அரசியல் கட்சிகள் விரைவில் மனுக்கள் தாக்கல் செய்யும்

(கொழும்பு)

தேர்தல் முறைகேடுகளுக்கு எதிராக, பலகட்சிகள் ஆட்சேபனை மனு தாக்கல் செய்ய விருப்பதாக தெரியவந்துள்ளது.

இவை பெரும்பாலும், அடுத்த வாரமளவில் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கலாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வகையில், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சிக்கு எதிராக தேர்தல் ஆட்சேபனை மனுவொன்றை தாக்கல் செய்ய தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவு செய்திருப்பதாகவும், இதுகுறித்து சட்ட ஆலோசனைகள் பெற்று வருவதாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் வி. ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி என்பன பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு எதிராக தனித்தனியாகதேர்தல் ஆட்சேபனமனு தாக்கல் செய்யவிருப்பதாகவும்,

இவை ஓரிரு தினங்களில் தமது ஆட்சேபன மனுக்களை தாக்கல் செய்யவிருப்பதாகவும் சம்பந்தப்பட்ட கட்சிப் பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர். (உ)

அச்செழு மெதடிஸ்மிசன் பாடசாலை அதிபராக ப. சின்னராசா பொறுப்பேற்றுள்ளார். (க-79)

## அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயம், மட்டுவில்கமலாசனி வித்தியாலயம், மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலிருந்து இவ்வருடம் ஜீ.சீ.ஈ.சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களை நாளை வெள்ளிக் கிழமை மு.ப 9.00 மணிக்கு கரவெட்டி விக்னேசுவரா மகாவித்தியாலயத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அன்றைய தினம் விவசாய, மனையியல், சங்கீத செய்முறைப் பரீட்சை அறிவுறுத்தல்கள், நேரசூசி என்பனவும் வழங்கப்படவுள்ளதால் மேற்படி மாணவர்களை தவறாது சமுகமளிக்குமாறு சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலய அதிபர் கே.எம் சாம்பசிவம் கேட்டுள்ளார். (செ)

இலங்கையின் பகுதிக்குச் செல்லப் போவதாகவும்,

கொண்டமை குறிப்பிடத்தக்கதே. (க-த)

# தரம் - 05 புலமை பரிசில் பரீட்சை மேலும் சில முடிவுகள்

(அரியாலை)

வலிகாமம் வலயத்தில் தரம் – 5 புலமைப் பரிசில் பரீட்சை சித்தி விபரம் நான்கு கோட்டங்களும் ஒரே பார்வையில்

★ சங்கானைக் கோட்டம்
பரீட்சைக்குத் தோற்றியோர் 429
சித்தி பெற்றோர் 50
சித்தி வீதம் 11.65%
அதிகூடிய புள்ளி:-
வட்டு திருநாவுக்கரசு வித்தியாலயம் 169 புள்ளிகள்.
அதிகூடிய சித்தி பெற்றோர் யாழ்ப்பாணக் கல்லூரி 11 பேர்

★ சண்டிலிப்பாய் கோட்டம்
பரீட்சைக்குத்
தோற்றியோர் 587
சித்தி பெற்றோர் 58
சித்தி வீதம் 9.9%
அதிகூடிய புள்ளி:-
மானிப்பாய்மெமோறியல்ஆங்கிலப்பாடசாலை 175 புள்ளி.
கூடிய சித்தி பெற்றோர்
சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம் 10 பேர்

★ உடுவில் கோட்டம்
பரீட்சைக்குத்
தோற்றியோர் 591
சித்தி பெற்றோர் 91
சித்தி வீதம் 15.39 %
அதிகூடிய புள்ளி;- தாவடி இ. த. க. பாடசாலை 177 புள்ளி
கூடிய சித்தி பெற்றோர்:-
உடுவில் மகளிர் கல்லூரி 22 பேர்

★ தெல்லிப்பழை கோட்டம்
பரீட்சைக்குத்
தோற்றியோர் 286
சித்தி பெற்றோர் 34
சித்தி வீதம் 11.4 %
அதிகூடிய புள்ளி:-
மகாஜனா கல்லூரி180 புள்ளி
கூடிய சித்தி பெற்றோர்:-
மகாஜனா கல்லூரி 16 பேர்

வலிகாமம் கல்வி வலயம்
பரீட்சைக்குத் தோற்றியோர் 1893
சித்தி பெற்றோர் 233
சித்தி வீதம் 12.3 %

(க-106)

# ஏழை நாடுகளுக்கு உதவ பணக்காரநாடுகள் முன்வரவேண்டும்

## இந்தியா வேண்டுகோள்

(நியூயோர்க்)

ஏழைநாடுகளுக்கு பணக்கார நாடுகள் உதவுவதில்லை என்று இந்தியா ஐ.நா.குழுக் கூட்டத்தில் கூறியுள்ளது.

நியூயோர்க்கில் இடம் பெற்றஐக்கியநாடுகள் சபைக் குழுக்கூட்டத்தில் பேசிய இந் தியப்பிரதிநிதி மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசுகையில்; ஏழை நாடுகள் கடன் பளு வால்கஷ்டப்படுவதினால் மக் கள்பட்டினியாலும்நோயினா லும்வாடுகிறார்கள். ஆனால் பணக்காரநாடுகள் இதுவிட யத்தில் உதவுவதற்கு முன்வர வேண்டும்.

கடந்த 10ஆண்டுகளாக வறிய நாடுகள்தாங்களாகவே சுயமுயற்சியில் முன்னேறி வருகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த நாடுகளுக்கு தக்க சமயங்களில் ஐ.நா சபை யூடாகவோ மற்றும் அமைப் புகள் மூலமாகவோபணக்கார நாடுகள் உதவ முன்வரவேண் டும் என்று கேட்டுக்கொண் டார். (து)

# புதுச்சேரியில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த அரசு முன்வரவேண்டும்

## ஜனதாக் கட்சி தலைவர் கோரிக்கை

(பாண்டிச்சேரி)

புதுச்சேரியில் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலை நடத்த அரசு முன்வர வேண் டும் என்று பாரதிய ஜனதாக் கட்சியின் புதுவைத்தலைவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்கை யில்; அடுத்த சட்ட சபைத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் உள்ளூராட்சிமன்றங் களின் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் அதற்கான ஏற்பாடுகளை யூனியன் அரசு கவனிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

கடந்த 25 ஆண்டுகளாக இத்தேர்தல் நடைபெற வில்லையென்றும் மாநில அந் தஸ்து புதுச்சேரிக்கு கிடைக் காதவேளையிலும் உள்ளூர் ஆட்சித்தேர்தல்களை நடத்த புதுவை அரசு முன்வரவேண் டும் என்று பாரதிய ஜனதாக் கட்சியின் புதுவைத்தலைவர் தெரிவித்தார். (து)

# அழிந்து கொண்டிருக்கும் சிறுத்தை இனத்தை மீண்டும் உருவாக்க இந்திய விஞ்ஞானிகள் முயற்சி

(புதுடில்லி)

சுமார் 50 வருடங்களுக்கு முன் இந்தியாவில் வாழ்ந்து அழிந்து விட்ட உயிரினமான சிறுத்தை புலியின் உயிர் நகல் எடுக்கும் முயற்சியில் இந்திய விஞ்ஞானிகள் ஈடுபட்டுவரு கின்றனர்.

இதற்காக,தென் இந்திய மாநில ஹைதராபாத் நகரில் ஒரு மில்லியன் டொலர் செல வில் உயர் தொழினுட்பஆய்வு கூடமொன்று அமைக்கப்பட்டு வருகிறது. (உ)

# உலக தரிசனம்

## ஹெலிகொப்டர் விபத்து

இந்தியா விமானப் படை யின்ஹெலி கொப்ரர்ஒன்று அருணாச்சல பிரதேசத்தில் விழ்ந்து வெடித்ததில் விமா னப்படைவீரர் ஒருவர் கொல லப்பட்டார் நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர். (க-த)

# பெற்றெடுத்த குழந்தையை; திட்டமிட்டு கொன்று புதைத்த கொடூரத் தாய்

## சேலத்தில் சம்பவம்

(சென்னை)

பெற்றெடுத்த குழந்தை யின் வாயில்; நெல்மணியைப் போட்டு பாலை ஊற்றி மூச் சுத்திணறச் செய்து கொன் றாளாம் கொடூரமான தாயொருத்தி.

தமிழ்நாடு சேலத்தில் நடந் துள்ள இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது.

ஆண் குழந்தையை எதிர் பார்த்திருந்த போதிலும், விருப்பத்திற்குமாறாக பெண் குழந்தை பிறந்தது.

இதனால் வெறுப்புற்றதாய், குடும்பத்தவரின் ஒத்துழைப் புடன் பிறந்து ஒரு நாளே ஆன அப் பெண் சிசுவை மனி தாபிமானமற்ற முறையில் கொலை செய்து பின்வளவில் புதைத்ததாகவும், எவ் வாறோ பொலிஸாரின் காது களுக்கு விடயம் எட்டியதன் பேரில் சம்பந்தப்பட்டவர் கள் அனைவரும் சிறையிடப் பட்டுள்ளதாகவும் தெரியவந் துள்ளது. (உ)

# மேற்காசியாவில் இந்தியர்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள்

## வெளியுறவு அமைச்சு தகவல்

(ஜெருசலேம்)

இஸ்ரேலிலும் பலஸ்தீனத் திலும் உள்ள இந்தியர்கள் மிகப்பத்திரமாக இருப்பதாக இந்தியா அறிவித்துள்ளது.

இஸ்ரேல் பலஸ்தீன பகுதி களில் மோதல்கள் அடிக்கடி நடைபெறுவதால் அங்கு வாழும் 300 இந்தியர்களுக் தக்கபடிபாதுகாப்பாக இருப் பதாகவும் அவர்களுக்கு தக்க பாதுகாப்புக் கொடுக் கப்பட்டிருப்பதாகவும் இந் திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் தெரிவித்தார்.

அங்கு வசிக்கும் இந்தியர் களை நமது தூதரகங்கள்மிக வும் உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இந்தியப்பாராளுமன்றத் தில் கேட்கப்பட்ட கேள் விக்கே மேற்கண்டபடி திலை வெளியுறவு அமைச்சர் தெரி வித்தார். (து)

## பொலிஸார் மீது வழக்கு தாக்கல்

(சென்னை)

நீலகிரி தேயிலைத் தோட் டத்தில் தொழிலாளர்களை நிர்வாணப்படுத்தியதற்காக நட்டஈடுகோரி வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

காவல்துறையினர் மீது தொடரப்பட்ட வழக்கு இப் பொழுது உயர் நீதிமன்றத் திற்கு பாரப்படுத்தப்பட்டுள் ளதாகத் தெரியவருகிறது. (து)

# நடிகர் ராஜ்குமார் விடுதலை வீரப்பனின் பிரச்சினையைத் தீர்க்குமா?

கன்னட நடிகர் ராஜ் குமாரை சந்தனக் கடத்தல் வீரப்பன் விடுதலை செய்வ துடன் பிரச்சினைகள் தீர்ந்து விடுமா என்று நீதியரசர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; தமிழக அரசும் கர்நாடக அரசும் இந்த விடயத்தில் இப்படி நடந்து கொள்வதை யிட்டு வருத்தம் தெரிவிப்ப தாகவும் இருமாநில அரசு களும் மூடிய கடிதத்தில் என்ன எழுதிக் கொடுத்திருக் கிறார்கள் என்பது சிந்திக்க வேண்டியவிடயம் என்றும் தெரிவித்தார்.

வீரப்பனிடம் சென்ற பழ. நெடுமாறனின் பேச்சுகளின் முடிவுகள் பற்றி முதல்வர் மு. கருணாநிதியுடன் பேசி என்ன பதிலைத் தரப்போகி றார் என்று காத்திருக்கிறது கர்நாடக அரசு என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

# திட்டமிட்ட வெடிகுண்டுத் தாக்குதலே அமெரிக்க கப்பல் வெடித்ததிற்கு காரணம்

## ஜெமன் அதிபர் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

அண்மையில் ஜெமன் நாட்டு துறைமுகம் ஏடனில் தரித்துநின்ற சமயம், அமெ ரிக்க யுத்தக்கலம் வெடித்துச் சிதறியமைக்கு திட்டமிடப் பட்ட வெடிகுண்டுத்தாக்கு தலே காரணமென ஜெமன் நாட்டு அதிபர் அலி அப்துல் லாஷாலி ஒப்புக்கொண்டுள் ளார். நடந்த தினத்தில் இருந்தே அமெரிக்கா உறுதியாகக் கூறி வந்தபோதிலும், அதனை ஜெமன் அதிபர் மறுத்து வந் தமை குறிப்பிடத்தக்கது.

எனினும், வெடித்துச் சித றிய சடற்கலத்தில் இருந்த மாலுமிகளின் சடலங்களை தேடிக் கண்டுபிடிக்கும் பணி யிலும், இது எவ்வாறு, எப்

# 24 லட்சம் பேர் எயிட்ஸால் பாதிப்பு தென்னாபிரிக்கா அதிர்ச்சித் தகவல்

(ஜொகநன்ஸ்பேக்)

தென் ஆபிரிக்காவில் இவ் வாண்டு சுகாதார அமைச் சினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி 42 லட்சத் துக்கு அதிகமானோர் தற் போது எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டிருப்பது வெளி யாகியுள்ளது.

2000 ஆம் ஆண்டின் 10 மாதங்களே கடந்த நிலையில் மேலும் பல ஆயிரங்களால் எய்ட்ஸ் நோயாளர் தொகை அதிகரித்திருப்பது உலக நாடுகளிற்கு ஒரு சவா லாகவுள்ளது.

பல குழந்தைகளும் தம் உடம் பில் எச்.ஐ.வீ.கிருமியை உள் வாங்கி அவஸ்தைப்படுவதும் கொடுமையானது என தென் னாபிரிக்க சுகாதார அமைச் சர் 'மென்டோக்ஷபலாலா மிஸிமெங்' கூறுகிறார்.

இதையடுத்து இங்குள்ள

லாஷாலி ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்தக் குண்டுவெடிப்புதிட்டமிட்டு வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட சதிச் செயல் என, குண்டுவெடிப்பு

யிலும், இது எவ்வாறு, எப்படி நடந்தது என்பதை ஆராய்வதிலும் அமெரிக்கத் தரப்பினர் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாக தெரிய வந்துள்ளது. (உ)

யாகியுள்ளது.

98 ஆம் ஆண்டு எய்ட்ஸ் நோயாளர் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் 99 இல் 6 லட்சம் பேர் எச்.ஐ.வீ. தாக்கத்துக்கு ஆளாகியிருந்தனர்.

இந்நாட்டில் 20 வயது தொடக்கம் 30 வயதுக் குட்பட்ட இளைஞர், யுவதிகளே புதிது புதிதாய் அதிகம் எய்ட்ஸ் நோய்க்கு ஆளாக்கப் படுகின்றனர்.

இந்நோயினால் பாதிக்கப்பட்டு மரணிக்கும் பெற்றோர்களை இழந்து நிற்கும்

இதையடுத்து இங்குள்ள கர்ப்பிணித்தாய் மார்களில் 22.4 வீதமானோர் எய்ட்ஸ் நோயாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர்.

இது எதிர்கால ஆரோக்கிய சமூகமொன்றை எதிர்பார்த்திருக்கும் தென்னாபிரிக்கா அரசுக்கான பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. (த)

# உலகில் பாடசாலை செல்லாத சிறுவர்கள் எண்ணிக்கை 11 கோடி

## ஐ. நா. குழந்தைகள் நிதியம் தெரிவிப்பு

(நியூயோர்க்)

உலகில் பாடசாலைக்கு செல்லாத சிறுவர்களின் எண்ணிக்கை 11கோடியைத் தாண்டியுள்ளதாக ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் தெரிவித்துள்ளது.

அவ் அமைப்பு இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

கல்வி கற்கவேண்டிய வயதில் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுதல், வறுமையின் தள்ளாமையால் பள்ளிக்குச் செல்லமுடியாதவர்கள், சிறு சிறு தொழில் முயற்சிகளில் ஈடுபடல் என பல்வேறு காரணங்களால் பாடசாலைக் கல்வியைத் தொடர முடியாத சிறுவர்களாக இவர்கள் உள்ளனர்.

அதாவது ஆண் சிறார்களுடன் ஒப்பிடும்போது, பாடசாலை செல்லாச் சிறுமிகள் தொகை இரண்டு மடங்காக அதிகரித்துக் காணப்படுகிறது.

இதற்குக் காரணம் பெண் பிள்ளைகள் இன்னும் தற்கால அடக்குமுறைகளில் இருந்து பல இடங்களில் மீளவில்லை.

அதனால் பல குடும்பங்களில் 'அவர்கள் அடிப்படைக் கல்வியைப் பெறுவதற்குகூட அனுமதிக்கப்படுவது தடையாகவுள்ளது.

எனவே இனிவரும் காலங்களில் பெண்கள் சார்கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளை சிரத்தையோடுமேற்கொள்ள வேண்டுமென கூறினார்.

அது மாத்திரமன்றி பருவ வயதில் போதைப் பழக்கத்திற்கு ஆளாகி திசைமாறிப் போகாமல் பள்ளிசிறார்களை தகுந்த முறையில் வழிகாட்டப்பட வேண்டியதும், அவர்களை கல்விபயில அனுப்ப வேண்டியதும் பெரியோர்களினதும், பொறுப்பு வாய்ந்த சர்வதேச நிறுவனங்களின் கடமையாகும்.

அதோடு இதற்காக அதிக பணம் செலவிட வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது எனவும் கூறினார். (த)

# சர்வாதிகாரப் போக்கில் பாகிஸ்தான் அமெரிக்கா குற்றச்சாட்டு

(நியூயோர்க்)

பாகிஸ்தான் சர்வாதிகாரப் போக்கில் நடந்து கொள்வதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

புரட்சி மூலம் கடந்த ஆண்டு பாகிஸ்தான் அரசைக் கைப்பற்றிய ஜெனரல் முஷாரப்பின் பிரதம செயலர் கூறுகையில் ஓராண்டிற்குள் ஜனநாயக வழிக்கு பாகிஸ்தான் திரும்பி விடுமென்றும் முன்னைய ஆட்சியாளர்களில் ஊழல்களை களைந்த பின் ஜனநாயக வழிக்கு திரும்பும் என்று கூறியிருந்தார்.

ஓராண்டு முடிந்தும் அங்கு என்ன நடக்கிறது என்று அமெரிக்க வெளியுறவு அதிகாரி ஒருவர் பேசுகையில் கேட்டார்.

அவர் மேலும் தொடர்கையில் பாகிஸ்தானில் தனிநபர் உரிமைகள் மறுக்கப்படுகின்றன வென்றும் பத்திரிகை சுதந்திரம் இல்லையென்றும் கட்சிகளின் செயற்பாடுகள் அடக்கி வைக்கப்படுகின்றன வென்றும் குறிப்பிட்டார்.

இதே வேளை உள்ளூர் சபைகளின் தேர்தல் பற்றிப் பேசப்பட்டது. இப்போது அதுபற்றிப் பேச்சே இல்லை பாகிஸ்த னில் சர்வாதிகாரப் போக்கே மேலோங்கி நிற்கிறதென்றும் தெரிவித்தார். (து)

''உடுக்கை இழந்தவன்
கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

குறள்

வலம்புரி

## செய்தவினையின் அறுவடை

பதினோராவது பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் மிகச் சொற்பமென்பது முடிந்த முடிவாகிவிட்டது. எத்தனை முயற்சி செய்தாலும் ஒரு வருடத்திற்காவது அதன் ஆயுட்காலத்தைத் தக்கவைக்க முடியுமாவென்பது சந்தேகமே. அந்தளவிற்கு நிலைமை மோசமாகிவிட்டது

1978-ம் ஆண்டு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவால் அறிமுகப்படுத்தப் பட்ட விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் அறுவடை இது. ஆரம்பகாலத்தில் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் சாதகமாகத் தோற்றம் அளித்தபோதிலும்இருபத்திரண்டு வருடங்களின் பின் அதன் உண்மைத் தோற்றம் வெளியாகிவிட்டது.

இனிமேல் நாட்டில் அடிக்கடி தேர்தல் இடம் பெறுவதை எவராலும் தடுக்க-தவிர்க்க முடியாத தொன்றாகிவிட்டது.

ஏற்கனவேபொருளாதாரத்தில் பின்னடைவிலுள்ள இலங்கைநாடு தமிழர்களுக்கெதிரான யுத்த செலவிற்காக தன்னையே அடைமானம் வைக்குமளவிற்கு போய்க்கொண்டிருக்கிறது. இந்நிலையில் அடிக்கடி தேர்தலும்இடம் பெறுமாயின் நாட்டின் பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தி என்ற எண்ணக்கருக்கள் வெறும் வாய்மூல வாசகங்களாக இருக்குமேயொழிய நிதர்சனமாக அதனை நாடு அடைந்துவிட முடியாது.

இலங்கை வரலாற்றில் தமிழர்கள் ஒரே ஒரு தடவை எதிர்க்கட்சி ஆசனத்திற்கு தலைமை தாங்கியதை சகிக்க முடியாத ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் அவரோடு இணைந்த

# 21 ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளும் கல்வி அபிவிருத்தியும் முகாமைத்துவ விழிப்புணர்வும்

உலகின் மூன்றாம் மண்டல நாடுகள் சமூக-பொருளாதார-கலாசார பெறுமானங்களில் இன்று பல சவால்களை எதிர் நோக்கியுள்ளன.

அபிவிருத்தி அடைந்து வருபவையாகவுள்ள இந்நாடுகளில் எமது நாடும் ஒன்றாகும். விடைபெறும் நூற்றாண்டு பல அபிவிருத்திகளைக் கண்டாலும் கூட கசப்பான கறைபடிந்த அத்தியாயங்களையும் தனது வரலாற்றுச் சுவடுகளில் பதிந்து விட்டே மறைகின்றது.

அச்சுவடுகளில் பதிக்கப்பட்ட பல தடங்கள் அடுத்த நூற்றாண்டின் சவால்களாக எழுந்துள்ளன. அத்துடன் நிமிடத்துக்கு நிமிடம் மாறிவரும் உலக ஒழுங்கில் சவால்களை எதிர் கொள்வதே சாதாரண வாழ்க்கையாகிவிட்டது.

### எதிர்கொள்ளும்சவால்கள்

பொருளாதார வளர்ச்சிக் குறைவுகள், வறுமை, உள் நாட்டு அரசியல் பிணக்குகளும் முடிவில்லாத போர்களும், அகதிகள் பிரச்சினைகள், போதைப் பொருள் பாவனை, சிறுவர், பெண்கள் துஷ்பிரயோகம், வேலையில்லாத் திண்டாட்டம், கல்வியை ஜனநாயகப்படுத்த முடியாமை, சுற்றாடல் மாசடைதல், தொழில் நுட்ப அறிவின்மைகள், விரைவாக மாறும் சமூக அடிப்படைத் தேவைகளுக்கு முகம் கொடுக்க முடியாமை, பொதுச் சேவைகளில் ஊழல் பொறுப்புணர்வின்மை, வெறும் அறிவுக் கையளிப்பு என்ற வகையில் திறன்களோ, தேர்ச்சிகளோ, மனப்பாங்கு மாற்றங்களோ அற்ற போட்டி, வர்த்தக ரீதியான கல்வி முறையின் பரம்பலும், விழுமியங்களின் சிதைவுகளும், போன்ற பல சவால்களை உலகின் எல்லா நாடுகளும் எதிர் நோக்குகின்றன.

### கல்வி அறிவின் அவசியம்

மேற் குறிப்பிட்ட சவால்களைத் தீர்க்கப் பல ஆய்வுகள் செய்யப்பட்டு பலபிரச்சினைகளைத் தீர்க்கும் வழிகளும் நடை முறைக்கு வந்து விட்டன. 21 ஆம் நூற்றாண்டின் சவால்கள் குறித்த அவுஸ்திரே

காலம் என்பது நாம் செல்லுமிடமல்ல மாறாக நாம் அதனை உருவாக்குகின்றோம் அதற்கான வழிகளை கண்டறியப்படுவதில்லை. உருவாக்கப்படுகிறன. அத்தகைய வழிகளை உருவாக்குவது. உருவாக்குபவரையும் சென்றடையும் இடத்தையும் மாற்றியமைக்கின்றது இதற்குக் கல்வியறிவுப் பிரவாகமே துணை செய்யும்'' என்கின்றது.

இங்கே கல்வி மனிதனது அனைத்துச் சவால்களையும் வெற்றி கொள்ள உதவும் எனச் சுட்டப்படுகின்றது. பொருளாதார நிபுணத்துவ தேர்ச்சிகள் கல்வியறிவுள்ள மனித வளத்திலேயே தங்கியுள்ளது. அபிவிருத்தி அடைந்து வரும் ஆசிய, ஆபிரிக்க இலத்தீன் அமெரிக்க நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களின் படி வளர்ந்தோர் குடித்தொகையில் சராசரிக் கல்வியறிவு மட்டத்தை ஒராண்டில் உயர்த்தும்போது மெய்த்தேசிய உற்பத்தி மூன்று தொடக்கம் ஐந்து சத வீதம் வரை அதிகரிப்பைக் காட்டியது.

இதன் படி சமூக கலாசார விழுமியங்களுடன் பொருளாதார சவால்களையும் வெற்றி கொள்ளும் முதலீடாகக்கல்வி உள்ளதுபுலனாகும். இதையே இலங்கைதேசியகல்விஆணைக்குழு தனது முதலாவது அறிக்கையில் கல்வியின் மூலம் நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்கலாம் எனச் சுட்டுகின்றது.

உலகப் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி என்பவற்றிற்கான அமைப்பின் (OECD) கல்வி ஆராய்ச்சி மற்றும் புதுமைப் புனைவுமைய ஆய்வறிக்கையில் இன்றைய மற்றும் புதிய நூற்றாண்டில் உலகின் தனிநபர், சமுதாய அபிவிருத்தி சவாவல்களின் வெற்றிக்குஅவசியமான கல்வி தொடர்பான மூன்று நுழைவுச் சீட்டுக்களைப் பட்டியலிடுகின்றது.

1) கல்வி தொடர்பான நுழைவுச் சீட்டு எடுத்து, எண் தொடர்பாடலுடனான-அறிவுத்திறன் மனப்பாங்குகளைப் பெறல்.

2) தொழிலுக்கான நுழைவுச் சீட்டு துரித தொழில் நுட்பமாற்றங்கள் இடம் பெற்று வரும்உலகில்தொழில் செய்யக்கட்டாயக் கல்வியின்

3) தொழில் முயற்சிக்கான அனுமதிச் சீட்டு தொழில் முயற்சியாளராக வருவதற்கானசிந்தித்தல், திட்டமிடல், ஒத்துழைத்தல், பிரச்சினைகளைத் தீர்த்தல், கண்காணித்தல் என்பவை பற்றிக் கூறுகின்றன.

புதிய நூற்றாண்டின் சவால்களை எதிர் கொண்டு வாழ்வதற்காக மேற்குறிப்பிட்ட நுழைவுரிமைகள் அனைத்திலும் வாழ் நாள் முழுவதும் கல்வி அளித்து வரக் கூடிய முறை ஒன்று இயங்கி வர வேண்டியுள்ளது. 21 ஆம் நூற்றாண்டுக்கான யுனெஸ்கோவின் கல்வி அறிக்கையிலும் உலக ரீதியான மனித வாழ்வை மேம்படுத்த உதவும் கல்வி தொடர்பாகப் பின்வரும் நான்கு தூண்கள் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்கிறது. அறிந்து கொள்ளக்

பா. தனபாலன்

கற்றல், செய்யக் கற்றல் இணைந்து வாழக்கற்றல், வாழ் நாள் பூராகவும் கல்வி பெற்று வாழ்ந்திடக் கற்றல் இவ்வாறு கல்வி மூலமாக அனைத்துச் சவால்களையும் வெற்றி கொள்ளலாம் என்ற உணர்வு மையம் சர்வதேச விழிப்புணர்வாக எழுந்துள்ளது.

### ஆசிரியர்களும் விழிப்புணர்வும்

மேற்குறிப்பிட்ட உணர்வுகளை எமது ஆசிரியர்கள் உள்வாங்கி எம் சொத்துக்களான மாணவர்களுக்கு புதிய எழுச்சியுடனும் விழிப்புணர்வுடனும், பொறுப்புணர்வுடனும் கல்வியை வழங்க வேண்டியுள்ளது. கல்வி முறையில் ஆசிரியர்கள் ஒரு பலவீனமான ஊழியர் என்ற நிலை நீக்கி தத்தமது பாடக்கல்வியியலில் ஆய்வறிஞர்களாகப்பரிணமிக்கும் வாய்ப்புக்களையும், சந்தர்ப்பங்களையும் உருவாக்கிக் கொள்ளுதல் அவசியம், இதற்கு கல்வியற் கல்லூரி மாணவர் மன்றங்கள் ஆசிரியவாண்மை விருத்தி அமைப்புக்கள், தொழிற் சங்கங்கள் பல்கலைக் கழகங்கள், ஆசிரிய கலாசாலை புதிய வழி ளைக் காண வேண்டியுள்ளது. கல்வியிடம்மேலும்பலகடமைகளையும், அபிலாசைகளையும்

ளின் ஒருங்கிணைந்த பலமும் விழிப்புணர்வுமே பயன்படும் எமது ஆசிரியர்களின் கையில் தான் 21 ஆம் நூற்றாண்டு உள்ளது எனில் மிகையாகாது.

### அறிவு முகாமை

மனித தொடர்பாடல்களாலும், தகவல்களாலும் ஆளப்படும் இன்றைய, எதிர்காலம் உலகின் சவால்களைச் சமாளிக்க அறிவு முகாமைத்துவம் (Knowledge Management) என்ற புதிய எண்ணக் கருவின் பயன்பாடு தேவையாகவுள்ளது. மனித முரண்பாடுகளைத் தீர்த்து வினைத் திறனான விளைவுகளை நிறுவனங்கள்பெறவேண்டுமானால் ஊழியர்களுக்குத் தொடர் அறிவுப் பயிற்சிகளை வழங்கி அவர்களது அறிவைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்தலின் அவசியத்தையே அறிவு முகாமை வலியுறுத்துகின்றது. பயிற்சி அதிகரிக்க அதிகரிக்க அறிவும் வினைத் திறனும் அதிகரிக்கும். இதனால் பயிற்சிக்கும் அறிவுக்கு மிடையே நேர்க்கணிய உறவு இருப்பதைக் காணலாம். அறிவை (Knowledge) செங்குத்துக் கோட்டிலும் பயிற்சிக் காலத்தை (Traning Perlod) கிடைக் கோட்டிலும் வரையும் கணியங்களுக்கு ஏற்ப கற்றல் அபிவிருத்தி வளையி 45 பாகை சாய்வில் மேல் எழுவதை உய்த்துணரலாம். இது அறிவு முகாமையின் பலா பலன்களை அளவிட உதவும். புதிய அறிவு வடிவங்களை உருவாக்கி அவற்றைப் பகிர்ந்து கொள்வதுடன் பொறுப்புக்களை ஏற்று செயற்பட்டால் அறிவு முகாமை நமது சவால்களை விடுவிக்கும் ஆற்றலாகிவிடும்.

கல்வியும் தொலைத் தொடர்பு நுட்பங்களும் 'பூமிக்கிராமம்' (Global Village) என்னும் அளவுக்கு இப்பரந்த உலகைச் சுருக்கி விட்டன உலகை ஒற்றையலகாகக் கொண்டு பொருளியல் அரசியல் மற்றும் அனைத்துத் துறைகளும் கணனித்திரையின் உதவியுடன் கல்வியியல் ஊடாக உலக மயமாதலை நோக்கி நகரத் தொடங்கி விட்டன. இந் நகர்வுகளின் நம்பிக்கை 21 ம் நூற்றாண்

வும் அவரோடு இணைந்த குழாமும் அதற்கொரு முடிவு கட்டுவதற்காகவே விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தைக் கொண்டுவந்தனர்.

அரசாட்சியில் தமிழர்க் கெதிராகச் சதிசெய்யவும், சிங்கள இனத்தின் ஆட்சி அதிகாரத்தைப் பாதுகாக்கவுமெனக் கொண்டுவந்த விகிதாசாரப் பிரதிநிதித்துவம் இன்று தலைகீழாக மாறிவிட்டது.

எந்த இனத்தின் ஆட்சி இறைமை பாதுகாக்கப் படவேண்டுமென்று எண்ணினார்களோ அதே ஆட்சியைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை விகிதாசாரப்பிரதிநிதித்துவம்இன்று சிறுபான்மையிடம் வழங்கியுள்ளது.

1978ல் ஜே.ஆர்.செய்த வினையின் அறுவடையை இன்று சிங்களஇனம் இறைமை இழந்து நில்என்றால்நிற்கும் நிபந்தனைக்குக் கட்டுண்டு சிறுபான்மையின் கரம்பற்றிஆட்சி செய்யப்போகிறது.

---

லியா ஆணைக்குழு பின்வரு மாறு கூறுகின்றது ''எதிர்

அவசியத்தை வலியுறுத்துகின்றது.

---



# சாயி அருளமுதம்

## 'இராமகிருஷ்ணர்'

ஒரு சமயம் இராமகிருஷ்ணர் ஒரு பெரியசபையைக்கூட்டினார். ராஸமணி என்கிற ராணியின் தேவாலயத்தில் இருக்கும் கிருஷ்ணரின் சிலையின் கால் உடைந்திருந்தது. அங்கங்களின் குறைபாடுள்ள விக்ரஹம் வழிபாட்டுக்குரியதல்ல என்று சிலர் சொன்னார்கள். பண்டிதர்கள் எல்லாம் இருந்தார்கள்.அவர்களும் தங்களுக் குக் கிடைக்க இருக்கும் தட்சணையிலேயே மனம் வைத்தவர்களாய்,காலில் குறையிருக்கும் கிருஷ்ணன் சிலை அகற்றப்பட்டு வேறு சிலை வைக்க வேண்டும் என தீர்ப்பு சொன்னார்கள். இராமகிருஷ்ணர் கண்ணீர் சிந்தினார்.

இது என்ன நியாயம்?ராஸமணியைக் கேட்டார் அம்மா!தற்போது தங்கள் மருமகன் மதுரநாதன்இருக்கிறார். அவர் எங்கோபிரயாணம் செய்யும்போதுகால் உடைந்து போனால் அவரை ஒதுக்கி விட்டு, வேறு மாப்பிள்ளையையா உங்கள்மகளுக்கு கட்டி வைப்பீர்கள்?கால் உடைந்தால் அதைச் சரி செய்யுங்கள் அதை விட்டு விட்டு இத்தனை காலம் பூ ஜித்துக்கொண்டு இருந்த சிலையை அகற்றிவிட்டு, வேறு சிலை வைக்கச் சொன்னால் சரியாகுமா?இதை ஒப்புக்கொள்ள முடியுமா? எனக் கேட்டார்.

சனாதன சாரதி

---

இன்றைய காலம் எதிர்பார்க்கின்றது. சவால்களை எதிர் கொள்ளும் இலக்குகளையுடைய இருப்பனவற்றைப் போன்று பாவனை செய்யாது புதிய அமைப்புக்களையும் செயற்திட்டங்களையும் ஆக்கி நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கு ஆசிரியர்க ளெல்லாம் தயாராகவே இருக்கும் .இதற்கு ஏற்ப உலகின் எந்தப் பகுதியிலும் தொழில் செய்து வாழக் கூடிய தேர்ச்சியுள்ளவர்களாக எமது மாணவர்களை ஆக்குவது ஆசிரியர்களின் புறக்கணிக்க முடியாத பொறுப்பாகவே உள்ளது.

---

# ★ குமாரின் கொலைக்கு முன் இடம் பெற்ற தொலைபேசி தொடர்புகளை கண்டறியுமாறு நீதவான் உத்தரவு

(கொழும்பு)

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் கொலை செய்யப்படுவதற்கு முன்னர் அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட அனைவரது விபரங்களையும் கண்டறியுமாறு கல்கிசை நீதவான், கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினர்க்கு உத்தரவிட்டுள்ளார்.

குமார் பொன்னம்பலத்தின் கொலை தொடர்பான விசாரணைகளை நடத்தி வரும் கல்கிசை நீதிபதி, குமார் பாவித்த தொலைபேசியை ஆய்வு கூடப்பரிசோதனைக்குட்படுத்துமாறும் பணித்துள்ளார்.

குமார் பொன்னம்பலம் கடந்த ஜனவரி மாதம் 5ஆம் திகதியன்று வெள்ளவத்தை இராமகிருஷ்ண வீதியில் அவரது காருக்குள் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக் கொள்ளப்பட்டமை தெரிந்ததே. (வ-உ)

---

## நெதர்லாந்திலிருந்து மூக்குக் கண்ணாடி

நெதர்லாந்திலிருந்து யாழ். மாவட்ட லயன்ஸ் கழகத்திற்கென ஒரு தொகை மூக்குக் கண்ணாடிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட லயன்ஸ் கழக கண் பார்வை செயற் திட்டத்தின் தலைவர்பா. தவபாலன்தெரிவித்துள்ளார். (வ-12)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவலந்துறைப் படிப்பகம்

# கதிர்காமரின் உரையால் நோர்வே மகிழ்ச்சியடைகிறது

## நோர்வே வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)
இலங்கையின் இனப்பிரச்சினைவிவகாரத்தில் நோர்வே தொடர்ந்து இயங்குவதை வரவேற்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்திருப்பதை யிட்டு தாம் மகிழ்ச்சியடைவதாக நோர்வேயின் வெளியுறவுஅமைச்சர் ஜோன் செக்லாண்ட் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இப் பத்திரிகையாளர் மாநாட்டில் லக்ஷ்மன்கதிர்காமரும் கலந்து கொண்டார். (ந)

★ கட்சி ஆதரவாளர் அதிருப்தி

## தேசியப் பட்டியலில் ஐ.தே.க உறுப்பினர்களுக்கு இடம்இல்லை

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் எம்பிக்கள் தெரிவில் மலையகத் தமிழர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினருக்காவது தேசியப் பட்டியலில் இடம் கொடுக்காது, ஐக்கிய தேசியக் கட்சியைச் சாராத மூவருக்கு பட்டியலில் இடம் கொடுத்திருப்பதே மலையக ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் மத்தியில் அதிருப்தியைஏற்படுத்தி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# அரசியலிலிருந்து விரட்ட முடியாது தி.மு.காவை அழிப்பேன்

ஜெயலலிதா சூளுரை

(சென்னை)
என்னை அரசியலிலிருந்து விரட்டி அடித்தாலும் அது முடியாத காரியம் நான் தொண்டர்களுடன் சேர்ந்து போராடி திராவிட முன்னேற்றக்கழகத்தை ஒழித்துக் கட்டாமல் விடமாட்டேன் என்று ஜெயலலிதா சூளுரைத்தார்.

அ.தி.மு.கவுக்காக உயிர் நீத்த தொண்டர்களின் குடும்பத்துக்கு நிதிஉதவி மற்றும் உதவிகளைச் செய்தார்.

இந்த நிகழ்ச்சியில் தொடர்ந்து பேசுகையில்; ஊழல்வழக்கில் 3 ஆண்டுகள் தண்டனை விதித்த தீர்ப்பால் தனக்கு அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத் தொண்டர்களுக்கிடையேயும் இடைவெளி ஏற்படவில்லையென்றும் கூறினார். (து)

ஏறாவூர்ப் பிரதேசத்தில்

## மக்கள் குடியிருப்பு மீது ஷெல்தாக்குதல் 24வயதுப்பெண் படுகாயம்

(ஏறாவூர்)
ஏறாவூர் 5 ஆம் குறுச்சிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற மோட்டார்த் தாக்குதலில் 24 வயதுடைய பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ள நிலையில் மட்டக்களப்புஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அவரது இரண்டு வீடுகளும் சேதமாகியுள்ளது.

இத் தாக்குதலின்போது பெரியதம்பி சாந்தி(வயது24) என்பவரே காயமடைந்தவராவார்.

இச் சம்பவம் பற்றித்தெரிய வருவதாவது;

'வம்மியடி' சோதனைச் சாவடி மீது புலிகள் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலை அடுத்து பொலிசார் தாக்குதல் மேற்கொண்டபோதே இந்த இளம் பெண் காயமடைந்ததாகச் சொல்லப்படுகிறது.

குண்டுத்தாக்குதலை அடுத்து பொலிசார் மக்கள் குடியிருப்புக்கள் மீதும் தாக்குதல்களை மேற்கொள்வதை மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானா கண்டித்துள்ளார். (வ)

**கலாநிதி---**
முன்னிலையில் கலாநிதி ராதிகா பெற்றுக்கொண்டார்.

ஒன்றியா பாராளுமன்றப் பிரதிநிதி கென்பிஷப் ஏற்பாடு செய்திருந்த வரவேற்பின்போது வியன்னா நகரத்தின் திறவுகோலையும், நகரபிதா மிக்ஷல் ஹாபிலிடமிருந்து ராதிகா குமாரசாமி பெற்றுக்கொண்டார்.

**மினி...**
11 படையினர் காயப்பட்டதாகவும் முகாம் பகுதி தமது கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதாகவும் புலிகளின் சடலங்கள் அங்கு மீட்கப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதே வேளை விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குள்ளான மினி முகாம் பகுதி தமது கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதாகவும் புலிகள் அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வ]

**பிரதி நிதி**
ஜனாதிபதியே வைத்திருப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ந)

**அவசர**
வாக்களித்தது.

இப்பிரேரணை வாக்களிப்பின் போது ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சபையில் இருக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (வ-2)

**பிரதிப்**
கூடுதல் விருப்பம் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவ்வளவு காலமும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக இருந்து பல்வேறு யுத்த முனைகளுக்கு நேரடியாகச் சென்றுஇராணுவத்தினரை வழிநடத்திய அனுருத்த ரத்வத்தையிடம் இருந்து இப்பதவிபறிக்கப்பட இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-4)

**உடம்பில்-**
ளர் திலக்கருணாரத்தின தெரிவித்துள்ளார்'

அவர் மேலும் கூறுகையில் இரண்டு வருடங்களுக்கு ஒருவராக பாராளுமன்றில்சுழற்சி முறையில் பதவிவகித்து சிங்கள மக்களின் நலனுக்காக பாடுபடுவோம் என்றும் சிறுபான்மையினரின் நலன்களை உத்தேசித்து புதிய அரசியலமைப்பைபாராளுமன்றில் முன்வைத்தால் அதை கடுமையாக எதிர்ப்போம் என்றும் சிஹல உறுமய கட்சியின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-4

**சபாநாயகராக---**
கோஷங்களின்மத்தியில் புதிய சபாநாயகராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

எதிரணியைச் சேர்ந்த அநுரா பண்டாரநாயக்கா பாராளுமன்ற சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்டமை இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றின் சிறப்பான அம்சமாகக் கணிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற சம்பிரதாயங்களின்எதிர்பார்ப்பிகளுக்கு மத்தியில் இடம்பெற்ற புதிய சபாநாயகரின் தெரிவும், பிரதிசபாநாயகராலும்குழுக்களின் பிரதித் தலைவர்கள் ஆகியோரும் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டமைநேற்றையகூட்டத்தொடரின்சிறப்பம்சமாரும்.

பிரதிச் சபா நாயகராக முன்னாள் இராணுவப் பேச்சாளரும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் உறுப்பினருமான சரத் முனசிங்காவின் பெயரை கலாநிதி நிச்சட் பத்திரன வழிமொழிய, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பிய சோம உபாலி வழிமொழிய ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

## அனுருத்தவின் மகன் பிணையில் விடுதலை

(கொழும்பு)
பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையின் மகன் லொஹான் ரத்வத்தையை நேற்று ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்வதற்கு நீதவான் அனுமதியளித்தார்.

கடந்த 12ந் திகதி மத்திய மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத்தின் அலுவலகம் முன்பாக தமது சகாக்களுடன் அடாவடித்தன நடவடிக்கையில் ஈடுபட்டமைக்காக இவர் பொலிசில் சரணடைந்திருந்தார் என்பது ஏற்கனவே அறிந்ததே.

விடுதலை செய்யப்பட்ட லொஹான் ரத்வத்தே ஒவ்வொரு மாதத்தின் முதல் ஞாயிற்றுக் கிழமைகளில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் ஆஜராக வேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது. (ந-2)

## நேற்று வரை 1962 தேர்தல் வன்முறைகள்!

(கொழும்பு)
நடந்து முடிந்த 11 வது பாராளுமன்றத்தின் தேர்தலை அடுத்து நேற்றுவரை 1962 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் எஸ்.பி திஸநாயக்கா அறிவித்துள்ளார்.

இந்த 1962 வன்முறைச் சம்பவங்களில் 47படுகொலை சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன என்றும், இதில் 27 பேர்கள் மதவாச்சியில் இடம் பெற்ற கட்சிக்கூட்டத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களாவர் (வ)

## திருமதி அனுருத்தரத்வத்தை பேரியல் அஷ்ரப் சந்திப்பு

(கொழும்பு)
தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர்களில் ஒருவரான திருமதி பேரியல் அஷ்ரப்பை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்...

வரும் பூரண ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்ததுடன் கட்சிக்காகத் தீவிர பங்களிப்பையாற்ற வேண்டுமெனவும் திருமதி ரத்வத்தை அவ...

# மரண அறிவித்தல்

## சின்னவன் தம்பிஐயா

கோண்டாவில் கிழக்கு நாராயணன் வீதியைச் சேர்ந்த சின்னவன் தம்பிஐயா காலமானார். அன்னார் சின்னவன் முத்தம்மாவின் அன்பு மகனும், சின்னப்பு நாகம்மாவின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும் குணநாதன் (இராமநாதன் நுண்கலைப் பீடம்), சற்குணநாதன் (யாழ். ப. நோ. கூ. சங்கம்), ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்தியவிமலா, அனுஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜீபன், சஜீபன், கஜிதா, சஜிதா, கஜன், கிரிசான், யசிஸ்தான் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 3-00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கொட்டைக்காட்டு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும்ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

நாராயணன் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்

த. குணநாதன்
(மகன்)

(கி-890)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தெரிவு செய்யப்பட்டார்.

பாராளுமன்றக் குழுக்களின் தலைவராக லலித் திஸநாயக்கா (பொ. ஜ. ஐ.மு.) பதவி ஏற்றுள்ளார்.

புதிய சபாநாயகர் அநுராவை பிரதமர் ரட்ண சிறிவிக்ரம நாயக்கா, ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க, ஈ·பி.டி·பி செயலாளர் டக்ளஸ் தேவானந்தா உட்பட பலர் வாழ்த்தினர்.

சபாநாயகர் அநுரா பண்டார நாயக்காமுன்னிலையில் புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்கள்.

(வ-2)

ஸ்ரீ செல்வா
(யாழ்ப்பாணம்)
விக்னேஸ்
லிவிங்ஸ்டன் நடித்த
நினைவெல்லாம் நீ
தினசரி
10-30, 2-30 (ப. நே)
(கி-688)

அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் மனைவி திருமதி ரத்வத்தை நேற்று முன் தினம் அவரது இல்லத்தில் சந்தித்து சுமார் ஒரு மணி நேரம் வரை பேச்சு நடாத்தினார்.

இச் சந்திப்பின் போது பேரியல் அஷ்ரப் முன்னெடுத்துச் செல்லும் முயற்சிகளுக்குக்குத்தானும் தனது கண

ரிடம் கேட்டுக்கொண்டார்.

இதே வேளை அனுருத்த ரத்வத்தைக் கெதிராகத் தேசிய ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவர் ரவூப் ஹக்கீம் பகிரங்கமாக கருத்துத் தெரிவித்து வந்ததையடுத்தே இச் சந்திப்பு இடம் பெற்றதென அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

[ந]

## பட்டலந்த வதை முகாம் சூத்திரதாரி டக்ளஸ் பீரிஸ் மீண்டும் கைது

கொழும்பு மாவட்ட ஓய்வு பெற்ற பொலிஸ் மா அதிபர் டக்ளஸ் பீரிஸ் சி. ஐ. டி. பொலிஸ் பிரிவினரால் மீண்டும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

1988,89 ஆம் ஆண்டுகளில் களனியில் இடம் பெற்ற படுகொலை தொடர்பாகவே இவரைக்கைது செய்துதடுத்து வைப்பதற்கான உத்தரவை கொழும்பு மஜிஸ்றேட் நீதிமன்றம் வழங்கியுள்ளது.

இதே வேளை பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பான விவகாரத்தில் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த இவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(ந-4)

## தமிழ் இளைஞர்கள் கைது

கொழும்பு நகருக்குள் மூன்று தற்கொலைக் குண்டுதாரிகள் ஊடுருவி உள்ளார்கள் என்ற சந்தேகத்தின்பேரில் நேற்று முன்தினம் காலை கொழும்பு நகரின் பலமுக்கிய பகுதிகள் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடாத்தப்பட்டது.

இத்தேடுதலின்போது தமிழ் இளைஞர்கள் பலர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகி)றது

(வ-2